www.tamilarangam.net

# தூண்டில்

Raya



Tamilische Zeitschrift des Südasienbüros

43

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜேர்மனியிலிருந்து தமிழகதிகளை இலங்கைக்குத் திருப்பியனுப்பவிருக்கும் விஷயம் இன்று இலங்கைவரை பரவி, முக்கிய செய்தியாக அடிபடுகிறது. யூன் மாதம் 30ஆம் திகதிக்குப் பின்னர் எந்தவித தகுதியான விசாவுமில்லாமல் திகிலடைந்து போயிருந்த அகதிகளின் குழப்பம் இன்னும் தீரவில்லை.

உண்மைச் செய்திகளை விட வதந்திகளே எல்லோரையும் தேவையற்றுப் பயமுறுத்தின. "திருப்பியனுப்புவதென்றால் விலங்கு போட்டுத்தான் அனுப்புவார்கள்"என்று ஒரு மூலையில் ஆரம்பிக்கும் உரையாடல் மறுமூலைக்குப் போய்த் திரும்பிவரும்போது,"ஒரு தமிழ் ஆளை விலங்கு போட்டு விமானத்தில் ஏற்றியதை தொலைக்காட்சியில் காட்டினார்கள்.நான் பார்த்தேன்"என்று உருமாற்றம் பெற்றிருக்கும். வதந்திகளை நம்பாமல் உண்மைத் தகவல்களைப் பெற சட்டத்தரணிகளுடனும்,அகதி உதவி நிறுவனங்களுடனும் நேரடியாகத் தொடர்பு கொள்வதே பயனுள்ளதாகும்.

முதலில் யூலை 1ஆம் திகதியிலிருந்து என்ன மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதைப்பார்ப்போம்.

பலரும் கருதுவதைப் போல புதிய சட்டம் எதுவும் யூலை மாதம் இயற்றப்படவில்லை.1991 ஜனவரி மாதம் அமுலுக்கு வந்த புதிய வெளிநாட்டவர் சட்டத்தின் பிரகாரம்,அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்டாலும்,தாய் நாட்டில் பிரச்சினை சுமுகமாகும்வரை தற்காலிகமாக ஜேர்மனியில் தங்க அனுமதிக்கும் "சகிப்புப் பத்திரம்"(Duldung) என்ற நடைமுறை யூன் மாதம் 30ஆம் திகதியுடன் முடிவடைந்துவிட்டது.

அதாவது ,டுல்டுங் பத்திர நடைமுறை இல்லாததால் அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்கள் அவர்களுடைய தாய் நாடுகளுக்குத் திருப்பியனுப்பப்படுவார்கள் .இதுவே தற்போது நடைமுறைக்கு வந்துள்ளது.

இரண்டாவது, இதுவரையில் இன அல்லது குழு அடிப்படையில் - தஞ்சம் நிராகரிக்கப்பட்டாலும் - தற்காலிகமாக தாய் நாட்டில் பிரச்சினை முடியும்வரை இங்கு தங்க அனுமதிக்கப்பட்டது. உதாரணமாக தமிழர்கள் என்ற அடிப்படையிலேயே தமிழ் அகதிகள் திருப்பியனுப்பப்படாமல் டுல்டுங் பத்திரம் வழங்கப்பட்டது.இந்நடைமுறை இனிமேல் இல்லாததால் தனித்தனியாக ஒவ்வொரு அகதிகளும் விசாரிக்கப்பட்டு அவர்கள் ஏன் திரும்பி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போக முடியாதென தனித்தனியாக விசாரிக்கப்படுவார்கள். இவ்விசாரணையில் கூறப்படும் காரணம் ஏற்றுக்கொள்ளப்படவில்லையெனில் இந்த அகதிகள் திருப்பியனுப்பப்படுவர்.

அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களைத் திருப்பியனுப்பாமல் மனிதாபிமான முறையில் தமது நிர்வாகத்திற்குட்பட்ட மாநிலங்களில் தங்க அனுமதிப்பதற்கு இதுகாலவரை மாநில அமைச்சர்களுக்கு இருந்த அதிகாரம் யூன் மாதம் 30ஆம்திகதியுடன் காலாவதியாகிவிட்டது. அகதிகளைத் திருப்பியனுப்புவதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் யூலை 1 ஆம் திகதியிலிருந்து மத்திய அரசாங்கத்திற்கு மட்டுமே உண்டு. இம்முடிவே அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவானதாயிருக்கும்.




அகதிகளை நாடுகடத்துவது தொடர்பாக இம்மாதம் 16 ஆம் திகதி மத்திய அரசு உள்நாட்டமைச்சரினால் மாநில அரசுகளின் உள்நாட்டமைச்சர்களுடன் கூட்டப்பட்ட கூட்டத்தில் கீழ்வரும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இக் கோரிக்கைகளை உள்நாட்டமைச்சர் சொய்பிள் இதுவரை நிராகரிக்காததால் இவை நடைமுறைப்படுத்தப்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டும் என்று பலராலும் நம்பப்படுகிறது.

1. 31.12.88க்கு முன்னர் அரசியல் தஞ்சம் கோரி, தஞ்சம் நிராகரிக்கப்பட்ட லெபனானியர்,ஈரானியர், லெபனானிலிருந்து வந்த பலஸ்தீனியர்,குர்திஸ்தானியர்,தமிழர் ஆகியோருக்கு Aufenthaltbefugnis பத்திரத்தைத் தற்காலிகமாக வழங்குதல்.

2. 31.12.88க்குப் பின்னர் அரசியல் தஞ்சம் கோரி, தஞ்சம் நிராகரிக்கப்பட்ட தமிழர்,அப்கானிஸ்தர் ,ஈராக்கிலிருந்து வந்த குர்திஸ்தானியர் ஆகியோருக்கு 31.12.91வரை டுல்டுங் பத்திரம் வழங்குதல்.பின்னர் நாடுகடத்துவது.

3. 31.12.88க்குப் பின்னர் அரசியல் தஞ்சம் கோரி, தஞ்சம் நிராகரிக்கப்பட்ட லெபனானியர்,சூடானியர் ,துருக்கியிலிருந்து வந்த கிறிஸ்தவர்,ஜெஸிடியர், சிரியாவிலிருந்து வந்த கிறிஸ்தவர்,பாகிஸ்தானிலிருந்துவந்த அகமடிஸியர்,யூகோஸிலாவியர் ஆகியோரை உடனடியாக நாடுகடத்தல்.

எனினும் இக் கோரிக்கைகளை தாங்கள் ஏற்கப்போவதிலலையென்றும்,தமிழரையும், லெபனானியரையும் நாடுகடத்தவேண்டும் என்றும் சி.டி.யூ. ,சி.எஸ்.யூ. கட்சிகளின் நிர்வாகத்தின் கீழுள்ள மாநில அரசுகளின் உள்நாட்டமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

அகதிகளைத் திருப்பியனுப்ப முயற்சிக்கும் மத்திய அரசின் முடிவை எதிர்த்து சர்வதேசமன்னிப்புச் சபை,மனித உரிமைச்சங்கங்கள்,அகதி உதவி நிறுவனங்கள்,அகதிக் குழுக்கள், மற்றும் பல ஸ்தாபனங்கள் தமது எதிர்ப்பைத் தொடர்ந்து வெளிக்காட்டி வருகின்றன .ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள் ,பொதுக்கூட்டங்கள்,கையெழுத்துச் சேகரிப்பென அகதிகளும், ஜேர்மன் மக்களும் சேர்ந்து பரவலான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். எனினும் ஒவ்வொருநாட்டு அகதிகளும் இந்த நெருக்கடியில் கூட கூட்டாகச் சேர்ந்து செயற்படாதது வேதனைக்குரியது.

புதிய வெளிநாட்டவர் சட்டங்கள் அகதிகளுக்கு எதிராக கடுமையாகவே இருக்கின்றன. இந்நிலையில் அகதிகள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும்பொருட்டு கீழுள்ள நடைமுறைகளைக் கவனத்திலெடுக்குமாறு சட்டத்தரணிகள் ஆலோசனை தெரிவிக்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1. வெளிநாட்டவர் அலுவலகத்திலிருந்து தாய்நாட்டுக்குத் திரும்பிப்போகும்படி அல்லது திருப்பியனுப்பவது குறித்து கடிதம் கிடைத்தால் உடனடியாகச் சட்டத்தரணியுடன் தொடர்பு கொள்ளவேண்டும். இம்முடிவை எதிர்த்து மேன்முறையீடு செய்யத் தரப்படும் அவகாசம் 1 வாரகாலம் மட்டுமே.

2. சட்டத்தரணிகளின் ஆலோசனையின்றி வெளிநாட்டவர் அலுவலகத்தில் தரப்படும் எந்தப் பத்திரத்திலும் கையெழுத்திடவேண்டாம்.

3. அரசியல் தஞ்ச விண்ணப்பம் முடிவுறாதவர்கள் எச் சந்தர்ப்பத்திலும் தமது தஞ்சத்தை ரத்துச் செய்யக்கூடாது.

நாடு கடத்தப்படவிருக்கும் பயத்தினால் பலர் வேறுநாடுகளுக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள் .எல்லை கடக்கும்போது பொலிசாரால் பிடிக்கப்பட்டால் நாடுகடத்தப்படுவதற்கு இதுவே போதுமான காரணமாகிவிடும்.

நாடு கடத்தும் திட்டத்தை சுவிஸ்,பிரான்ஸ்,பிரிட்டன் ஆகிய நாடுகளும் வைத்திருக்கும் செய்திகள் இப்போது வெளியாகியுள்ளன.பிரான்ஸில் விசா இல்லாமலுள்ள 3 இலட்சம் வெளிநாட்டவரில் சுமார் 1 இலட்சம் பேர் இவ்வருட இறுதிக்குள் நாடுகடத்தப்படவுள்ளார்கள் .அத்துடன் வேலைத் தடைச் சட்டமும் நடைமுறைக்கு வரவுள்ளது.

சுவிஸிலிருந்தும் தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்கள் நாடுகடத்தப்படவுள்ளார்கள். வேலைத் தடைச்சட்டம் 3 மாதங்களிலிருந்து 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. எனைய ஐரோப்பிய நாடுகளும் இவற்றையே பின்பற்றும் என்பதில் சந்தேகப்படத் தேவையில்லை.

எனவே அனைத்து நாட்டகதிகளும் ஒன்றிணைந்து இம் மனிதவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயற்படவேண்டும். அத்துடன் தங்கள் நாடுகளில் நடக்கும் மனிதாபிமான மீறல்களையும், அரச பயங்கரவாதங்களையும், அங்குள்ள மக்களின் துயர்களையும் தாங்கள் தஞ்சம் கோரியுள்ள நாட்டின் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். அகதிகள் எப்படி உருவாகுகிறார்கள் என்பதையும்,இதற்குப் பின்புலங்களாகவிருந்து மேற்கு நாடுகள் எப்படி வன்முறைகளைத் தூண்டிவிடுகின்றன என்பதும் எடுத்துக்காட்டப்படவேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழ் அகதிகளைப் பொறுத்தவரையில் இந்நாடுகளிலுள்ள புலிகளின் கிளைகளே ஈழப்பிரச்சினைகள் பற்றிய பிரச்சாரங்களை கூடுதலாக மேற்கொண்டு வருகின்றன. இதற்கான நிதி உட்பட போதுமான வசதிகள் இவைக்குள்ளன. எனினும் இவைகளின் பிரச்சாரங்கள் புலிகள் பற்றிய பிரச்சாரங்களாகவே நடைபெறுகின்றன என்பதும், இதில் மக்கள் பற்றிய உண்மைகள் அடிபட்டுப் போய்விடுகின்றன என்பதும் தெரிந்ததே.

எனவே சரியான, உரிய தகவல்களைத் தேடி ,வெளிக்கொணர எல்லோரும் முன்வரவேண்டும். புகைப்படக் கண்காட்சி, பிரசுரங்கள், பொதுக்கூட்டங்கள்.... என்று எல்லாவழிகளிலும் எங்கள் நாடுகளின் உண்மைநிலைகள் வெளிக்கொணரப்படவேண்டும். இவற்றை இந்நாட்டவர்களுக்காக மட்டுமல்ல, எம் நாட்டவர்களுக்காவும் செயற்படுத்தவேண்டும் என்பது கசப்பான உண்மை.

– றஞ்சித்

www.tamilarangam.net

# ஒரு கிறிஸ்தவனின் விண்ணப்பம்

எங்கள் பரமபிதாவே!

சீதனத்தில் பாதித்தொகை
ஏஜென்சிக்குப் போய்விட்டது.

அரை வருடச் சம்பளத்தின் மிச்சம்
சீட்டுக் கழிவுக்குப் போய்விட்டது.

ஒரு மாதச் சம்பளம்
இயக்கத்திற்குப் போனபின்
எனக்கென்று
ஆணிச் செருப்புக் கூட வாங்கமுடியாதிருப்பதேன்?

உயிர்த்தெழுந்த யேசுவே!

வேலைக்குப் போகும்போது
தூக்கத்தில்
அருகில் இருக்கும் பெண்ணின் மேல் சாய
அவள் சிரிக்க
பதிலுக்குக் கூடச் சிரிக்கமுடியாது
வேலை என்னைத் துரத்துகிறது.

எனது ஆண்டவரே!

விடியலிற்குச் சற்றுமுன் தூங்குகிறேன்.
காலை எழுந்து ஓடுகிறேன்.

மிகச் சிறந்த மேய்ப்பரே!

உம்மிடம் இறைஞ்சிக் கேட்கிறேன்.
எனது தேசத்தில்
என்ன நடக்கிறது?

இந்த நற்செய்தியை மட்டும்
சொல்லியருளும்.

ஆமென்!!!

சுகன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆஸ்பத்திரித் திருடர்கள்

உலக பணக்கார நாடுகளிலிருந்து பணம்படைத்தவர்கள் மூன்றாம் உலகநாட்டு மக்களின் உறுப்புகளை அறுத்தெடுத்து தங்கள் உடம்புகளில் பொருத்திக்கொள்கிறார்கள். இதோ ஓர் அறிவிப்பு: (19.01.89 இல் Indian Express இல் வெளியானது.)

KIDNEY DONOR WANTED FOR TRANSPL. BY A GERMAN LADY. APPLY SEAROCK HOTEL TEL. 6425454. ASK FOR MATTHIES.

ACB 23017

"வாழ்வு மகத்தானது" அது இந்தப் பணக்காரர்களுக்கு மட்டும்தானா?

இந்தியாவில் 800 மில்லியனுக்கும் அதிகமான மக்கள். இவர்களில் 80%மானவர்கள் ஏழைகள். இவர்களில் 40% ஆனவர்கள் வாழாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எதியோப்பியாவில் வாழும் மக்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஒரு சோற்று அவிலுக்கு வழியில்லாதவர்களாக, பட்டினியும், நோயும், இன்ன பிறவும் இவர்களைப் பாடைக்குள் தள்ளுகின்றன. பங்களாதேஷில் மக்கள் எங்கு போவதென்று தெரியாது திண்டாடுகிறார்கள்.

அய்ரோப்பாவின் காலனியாதிக்கம் ஏற்பட்டு இன்று 500 ஆவது ஆண்டுகள். விமரிசையாக புதிய இணைந்த அய்ரோப்பாவாக 1992இல் தொடர்ந்தும் நவீன முறையிலும்,முன்னர் இருந்த மாதிரியான காலனித்துவத்தின் அரைகுறை வடிவமாகவும், ஆசிய,ஆபிரிக்க,லத்தீன் அமெரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

க்க நாடுகளில் தங்கள் கால்களை ஆழமாகப் பதித்துள்ளனர். இதனால் சுரண்டப்படும் இந்த நாடுகளில் உள்ள மக்களின் தேவையும், அய்ரோப்பாவில் உள்ளவர்களின்தேவையும் வேறுபடுகின்றது. அங்கு பசியால் துடிப்பவர்களை அழித்து இங்குள்ளவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.

இதில் இன்னும் ஆத்திரப்பட வேண்டிய விடயம் என்னவெனில் டொக்ரர்களும்,அரசியல் படித்தவர்களும்,அதிகாரிகளும் மற்றும் மண்ணாங்கட்டிகள் பலபடித்தவர்களும் ஒன்றைத்தான் செய்கிறார்கள்.

டொாக்டருக்குப் படித்து,இங்கிலிஸ் பேசுபவர்தானே ஒன்றும் தெரியாத அப்பாவிகளின் சிறுநீரகத்தைக் கூட களவாடுகிறார்கள். இதற்கென்று சட்ட திட்டங்கள் வேறுவைத்திருக்கிறார்கள்.இவை மற்ற மேதாவிகளால் உருவாக்கபட்டது.

பாவம் ஒருநாள் தன்னும் "முறையாக" வாழ முடியாதா என்ற நப்பாசையில் தங்கள் உடலுறுப்புகளை விற்பதற்கு இந்தியாவில் அநேக மக்கள் தயாராக இருக்கிறார்களாம்!புலுடா.

இவ்வாறான"முறையானவாழ்வு" எது என்று போலியானவற்றில் ஆசைப்படுவதற்கும், பொருளாதார நிர்ப்பந்தத்தையும் ஏற்படுத்தினால் மக்கள் தயாராகத் தான் இருப்பார்கள்-தங்கள் உறுப்புகளை அறுத்து விற்பதற்கும் !! இறப்பதற்கும் உயிர்வாழவேண்டி இருக்கிறதல்லவா?!

இந்தியாவில் மருத்துவம் மேற்குலகமளவிற்கு வளர்ச்சியடைந்திருக்கிறதுதான்! ஆனால் இந்த மருத்துவவசதியை அனுபவிப்பவர்கள் யார்?இதேவளர்ச்சிதான் கையடையாளமிடும் மனிதரின் சிறுநீரகத்தையும் அங்கீகரிக்கப்பட்ட களவாக அறுத்துவிடுகிறதே!

70களில் இருந்தே சிறுநீரக மாற்றுச் சிகிச்சை குறிப்பாக ஆந்திராவில் நடக்கிறது.81இலிருந்து இதய மாற்றுச் சிகிச்சையும் நடக்கிறது. அதிசயத்தக்க மருந்துத்துறையின் வளர்ச்சி!ஆரம்பத்தில் இந்தியாவில் இப்படி சிறுநீரகத்தை விலைக்கு வாங்கி பொருத்திக்கொள்ள மத்தியகிழக்குநாடுகளிலிருந்து அநேகம்பேர் (1988 இல் 70%மான சிறுநீரக அறுவைச் சிகிச்சைகள் மத்திய கிழக்கைச் சேர்ந்தவர்களுக்கே நடாத்தப்பட்டது) விஜயம் செய்தார்கள்.பணம் என்னவெல்லாம் செய்யும்!




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1986ஆம்ஆண்டு ஒரு சிறுநீரகத்தின் விலை இந்திய ரூபாய்களில் 45ஆயிரம்.தற்போது இது 20 ஆயிரமாக வீழ்ச்சியடைந்து விட்டது!!காரணம் "அன்பளிப்பு" செய்யப் பலபேர் கியூவில் நிற்கிறார்கள்.இதனால் ஏஜென்சிகள் புறோக்கர்கள்,புறோக்கர்ப்புறோக்கர்கள்.... என்று ஒரு தொழிற் சங்கிலி உருவாக்கம் நடைபெற்றுவிட்டது.

எத்தனையோ பேருக்கு தமது சிறுநீரகம் எடுக்கப்பட்டுவிட்டது என்று தெரியாமலே திருடப்பட்டதும்,சிறுநீரகம்அறுக்கப்பட்ட பின்னர் பணம் எதுவும் கிடையாமற் போனதும் மோசடிகளுக்கு மேல் மோசடிகள்.

ஒரு சிறுநீரகப் புறோக்கர் சராசரி 10 ஆயிரம் ரூபா சம்பாதிக்கிறார். ஆனால் இவர்கள்



www.tamilarangam.net

மருத்துவமனைகளில் வேலை செய்யும் டொக்ரர்கள்,அதிகாரிகளின் கையாட்களே .இந்தியாவில் பெரிய ,வசதியான மருத்துவமனைகளுக்கு அருகே சென்றால் இந்தப் புறோக்கர்களைத் தாராளமாகச் சந்திக்கலாம்.

தூதுவராலயங்களுக்கூடாகவும் இந்தக் களவு சரளமாக நடைபெறுகிறது. எம்பசிகளில் வேலைசெய்பவர்களுக்கும் இந்த உள்ளூறுப்பு வியாபாரத்திற்கும் நிறையவே தொடர்புண்டு.

சிறுநீரகம் தேவைப்படுபவரின் உடல் பரிசோதிக்கப்பட்டு ,அவரது உடல்நிலை பற்றிய குறிப்புகள் எடுக்கப்பட்டு,தூதுவராலயங்களினால் சிறுநீரகம் "தானம்" பண்ணுபவர் ஏஜென்சிகளுக்கூடாகத் தேடப்படுவர்.

"அன்பளிப்புச்செய்பவர்"என்று சொல்லப்படுபவர் பற்றிய உடல் நிலைக்குறிப்புகள் இந்த ஏஜென்டுகளிடம் தயாராகவிருக்கும்.அதனால் ஏஜென்டுகள் உடனே சிறுநீரகத்தை அறுக்க விடுபவரைக் கண்டுபிடித்து விடுவார்கள்! சிறுநீரகமொன்றை அறுக்க விடுபவர் பொன்முட்டை இடும் வாத்தல்லவா?!

ஒருவர் தப்பித்தவறி அறுக்கவிடும் விருப்பத்தைத் தெரிவித்து அவரது உடலைப் பரிசோதனைக்குட்படுத்தி,குறிப்புகள் எடுக்கப்பட்டுவிட்டால்,ஒரு சிறைக் கைதியாகவே அவர் இந்த ஏஜென்சிகளால் 'பராமரிக்கப்படுவார்'!.

அறுப்பதற்கான ஆஸ்பத்திரியையும்,அறுக்கும் டொக்டரையும் இந்த ஏஜென்சிகள் சுளுவாகக் கண்டுபிடித்து விடுவார்கள்.

பம்பாயின் வடபகுதியில் இந்த அறுப்பை நடாத்துவதற்கு ஒரு இராணுவ முகாம் போல வெளியார் ஒருவரும் (தேவையில்லாமல்) உள் நுழையமுடியாத ஆஸ்பத்திரி கட்டப்பட்டுள்ளது. அரபு எண்ணெய்க் கிணறு முதலாளிகளும்,அவர்களது இந்தியக்கையாட்களுமாகக் கட்டியுள்ள,முற்றிலும் தனியாருக்கான மருத்துவமனையில் இந்த அநியாயம் தாராளமாகவே நடக்கின்றது.

சிறுநீரகத்தைப் பொருத்திக்கொண்டவர்கள் சிலவாரங்களில் தம் நாட்டுக்குத் திரும்பிவிடுவார்கள் .இவர்களுக்கு சிறுநீரகம் பொருத்திய டொக்ரர் தொடர்ந்தும் சிகிச்சையளிக்க வேண்டிய தேவையேற்பட்டு,இவை நடைபெறாதபோது அரபுநாடுகளின் அரசுகள் இந்திய அரசுடன் இப்பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது

www.tamilarangam.net

என்பது பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்தி, மேலதிக வசதிகள் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவாம்.

சிறுநீரகத்தைத் தாரைவார்ப்பவர் பாடு..? கிராமத்திலிருந்து சிறுநீரகத்தை அறுத்துக்கொடுக்க நகருக்குவந்தால் ,அறுத்து ஒரு வாரத்திலேயே ஆஸ்பத்திரியைவிட்டு துரத்திவிடுவார்கள் - இரண்டொரு குளிசைகளையும் கையில் கொடுத்து! வேண்டுமானால் சொந்தக் கிராமத்திற்குச் செல்வதற்கு றெயில் ஏற்றி நாடு கடத்தி விடுவார்கள்!! இதற்குப் பிறகு ஏதும் சுகவீனம் என்றால் சாகவேண்டியதுதான்!!! அந்த மாதிரி நரி வேலையாய் இந்தச் சிறுநீரக வியாபாரம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சிறுநீரகத்தை விற்பவர்கள் பொருளாதாரத்தில் மிகக் கீழே இருக்கும் ஏழைகள் மட்டுமல்ல! இரண்டு சகோதரிகளுக்குச் சீதனம் கொடுக்க வேண்டும் என்றால்,ஜேர்மனியில் ஒரு வேலை கிடைக்கவேண்டுமென்றால் தமது சிறுநீரகங்களை விற்றுவிடத் தயாராக மத்தியதர வர்க்க இளைஞர்கள் பலர்.

இந்தியச் சட்டத்துறையில் இந்த உள்ளூறுப்பு வியாபாரம் பற்றிய பல்வேறு பரிமாணச்சட்டங்கள் இல்லை. அறுக்கப்படுபவரின் கையடையாளமோ,கையெழுத்தோ,நொத்தாரிசின் முத்திரையுடன் வைக்கப்பட்டு,"சுய விருப்பத்தில் எனது சிறுநீரகத்தை அன்பளிப்புச் செய்ய நான் சம்மதிக்கிறேன்" என்ற படிவம் போதுமானது-ஒரு தம்பி அசைக்கேலாது! எந்தக் கோட்டும் அசையாது!!

மற்றது,இன்று நடைமுறையிலுள்ள மனிதாபிமானத்திற்குப் போதுமான பத்திரம். ஒப்பிறேசன் செய்யும் டொக்ரருக்கு இப்பத்திரம் கையிலிருந்தால் போதுமானது.சிறுநீரகத்தைத் தாரைவார்த்தவருக்குக் காசு கிடைத்ததா?சுய விருப்பத்துடன்தான் அவர் சம்மதித்தாரா? என்பவை யாரும் அக்கறைப்படாத சமாச்சாரங்கள்.

சில அமைப்புகளினால் இந்த வியாபாரத்திற்கெதிராகக் குரல் கொடுக்கப்பட்டது.இதற்கு மாற்றீடாக இறந்தோரின் உடலில்இருந்து மட்டும் உள்ளூறுப்புகள் எடுக்கப்படவேண்டும் என்பதற்குச் சட்டம் அங்கீகரிக்கலாம் என்ற பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன.இன்று அசுரவேகத்தில் வளர்ந்து வரும் இந்துமதவெறி அரசியலில் இது எப்படிப் பார்க்கப் படப்போகிறதோ?!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடுத்தது, இறந்த உடம்பிலிருந்து சிறுநீரகம் பெறுபவர் யார்?மிகவும் அவசியம் தேவைப் படுபவரா?அல்லது பணம் வைத்திருக்கும் வாழத்'தெரிந்த' இந்திய,வெளிநாட்டவரா?

மகாராஷ்டிய மாநிலத்தில் இருக்கும் Kidney Foundation எனும் அமைப்பு சொந்தக்காரர்களுக்கிடையிலான சிறுநீரகமாற்றுச் சிகிச்சைக்கு ஆதரவாகவும் மற்றவர்களுக்கு விற்பதற்கு எதிராகவும் இருக்கிறதாம்!வால்தவம்தான்!!

இன்று இந்தியாவில் இந்த வியாபாரம் பல மாநிலங்களுக்கும் பரவிவிட்ட ஆபத்து தெரிகிறது.இது பற்றி நாம் எமது எதிர்ப்புகளை தெரிவிக்கின்ற அதே வேளை தற்போது உயிருக்கும் உத்தரவாதமில்லாத நிலையில் முகாம்களில் வாழ்ந்துகொண்டிருக்கும் அகதிகளை விழிப்பாயிருக்குமாறு அறிவிப்பதுடன், அகதிகளின் நலனில் அக்கறை காட்டுமாறு அவர்களுடன் தொடர்புடையவர்களுக்கு வேண்டுகோள்விடுக்கிறோம்.

தனது சிறுநீரகத்தைப் பறிகொடுத்த ஒருவரின் பரிதாபக் கதையைப் பார்த்தோமானால் இக் கொடுமையை ஓரளவேனும் புரிந்து கொள்ளலாம்.

வீட்டில் ஏற்பட்ட சச்சரவினால் குஜராத்தில் கலோல் எனும் இடத்தைச் சேர்ந்த கோவிந்த பாய் தாகூர் பம்பாய் வந்துசேர்ந்தான்.கூலி வேலைகளில் நாட்கள் கழிந்தன .இருப்பிடமின்மையால் கைதுசெய்யப்பட்டு 9 நாட்கள் பொலிஸ் காவலில் இருந்த போது,தடிமன்,காய்ச்சலின் பின் அவனுக்கு மூக்கினால் இரத்தம் வடிந்தது."வெளியேறியபின் உனதுடம்பைப் பரிசீலிக்க இலவச வசதியுண்டு.நீ இந்த ஆஸ்பத்திரிக்குப் போ" என்று அவனுடன் காவலிலிருந்த இன்னொருவனால் கூறப்பட்டது.

பொலிஸில் இருந்து வெளியேறியபின் அவனையறியாமலே ஒரு ஏஜெண்டின் வலையில் அகப்பட்டுவிட்டான்.அவனது மூக்கால் இரத்தம் வடிதலை மாற்றுவதற்கு அவசியமானதென எக்ஸ்-றே எடுக்கப்பட்டது.இரத்தப் பரிசோதனை செய்யப்பட்டது.நாளாந்தச் சாப்பாட்டுச் செலவிற்குக் காசும் தங்குமிட வசதியும் உதவியெனும் பாணியில் கொடுக்கப்பட்டது.பின்னர் நடந்ததைக் தாகூர் சொல்கிறான்:

"....சோடா ஆஸ்பத்திரிக்குப் போகச் சொன்னார்கள். அங்கே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திலீப் என்பவன் அநேக பத்திரங்களில் கையடையாளம் போடும்படி என்னைப் பணித்தான். பின்னர் கும்பல்லா ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனார்கள். அங்கேஒர் ஒப்பிரேசன் செய்யவேணு ம் என்றார்கள். பின்னேரச் சாப்பாட்டிற்குப்பின் நித்திரைக் குளிசை தந்தார்கள். அதற்குப் பிறகு தண்ணீர் குடிக்கக் கூடாதென்றார்கள்.


காலை 8 மணியளவில் ஒப்பிரேசன் நடந்திருக்க வேண்டும். அசோக்காந்தியே இதனைச்செய்தார். மூன்றாம் நாள் அரபுநாட்டவன் ஒருவன் எனக்கு 2,000/= ரூபா கொண்டுவந்து தந்தான்.

நான் அங்கு வேலை செய்த நேஸிடம் ஏன் இவன் காசு தந்தான் எனக்கேட்டேன். அப்போது தான் எனக்குக் கூறப்பட்டது, அவனது மனைவிக்கு எனது சிறுநீரகம் அறுக்கப்பட்டு பொருத்தப்பட்ட விடயம்!

காசை நான் உடனே எனது தலையணைக்குக் கீழே மறைத்து வைத்தேன். அடுத்தநாள் அப்பணம் திருடப்பட்டுவிட்டது....."

(கட்டுரைக்கு உதவிக்குறிப்புகள்:
Südasien Nr. 4/89 )

- ந.சுசீந்திரன்



"இரண்டாயிரம் வருசத்திலை அனைவருக்கும் வீடு என்டதும் பிரேமதாசவின்ரை திட்டங்களிலை ஒண்டாம்!"

"இரண்டாயிரம் வருசம் வாறதுக்குள்ளை எப்பிடியும் வீடில்லாத ஆக்களைத் தீர்த்துக்கட்டிப்போடலாமெண்டு பிரேமதாச நம்புறான்போலை"

— வைத்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பதில்



தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் மரத்திற்குக் கிட்டே வந்து அண்ணாந்து பார்த்தபோது –அவனிற்கு அங்கே ஆச்சரியம் காத்திருந்தது. கீழேவீழ்த்துவதற்காக எந்த உடல்களுமே அங்கே தொங்கிக் கொண்டிருக்கவில்லை. கதை சொல்லுவதற்கு வேதாளம் வேறு அங்கு இருக்கவில்லை. வேதாளம் தன் ஸ்ரைலை மாற்றிவிட்டது. எப்படியாவது தன்னைத் தேடி வந்து எள்ளி நகைத்து கதை சொல்லி, கேள்வி கேட்கும் என்ற நம்பிக்கையுடன் நடக்கத் தொடங்கினான்.

"ஸ்ரொப். ஹான்ட்ஸ் அப்"

சத்தம் கேட்டு, பதகளித்து அவன் திரும்பினான். அங்கே வேதாளமிருக்கவில்லை. மூன்று பேர் கலாச்சினிக்கோக்களை நீட்டியபடி அவன் முன் நின்றனர்.

"ஹான்ட்ஸ் அப்... ஹான்ட்ஸ் அப் "

விக்கிரமாதித்தனிற்கு இங்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லில் விளங்காதபடியால், கைகளை உயர்த்தாமல் பதறியபடி நின்றான்.

"அவனுக்கு இங்கிலிஷ் விளங்கே லைப்போலை.தமிழிலை சொல்லடா"

"உயத்தடா கையை.பு... ஆண்டி"

இப்போது விக்கிரமாதித்தன் கைகளை உயர்த்தினான்.

"நீ எந்த இயக்கமடா?"

"இயக்கமா? எனக்குத் தெரியாது"

"உவன் சுத்துறான். இயக்கமில்லாட்டி ஏன் உவன்ரை இடுப்பிலை வாள் இருக்கவேணும்?"

"அப்ப ஆளைத் தட்டுவம்"

"வேண்டாம். அப்பாவிபோலக் கிடக்கிறான்"

விக்கிரமாதித்தனின் அருகில் சென்று வாளைப் பறித்துச் செக்பண்ணினான்.

"சோக்கான வாள். உதை வைச்சுக் கொண்டே ஞாயமான தலையளைச் சீவித் தள்ளலாம். ஆளை விடுவம்"

மூவரும், வஞ்சகம் செய்யாமல் அவனது வயிற்றில் ஒவ்வொரு உதை காலால் கொடுத்துவிட்டு மறைந்தார்கள்.

விக்கிரமாதித்தன் உதை வாங்கிய வயிற்றைப் பொத்தியபடி தனது வழியால் நடந்துகொண்டிருந்தபோது வேதாளம் பறந்துவந்து - அவனது தோளில் குந்தி, பிடரிமயிரைப் பிடிக்கு இழுக்கபடி நான்கு கேள்விகள் கேட்டது.


"அவர்கள் யார்?"
"அவர்கள் ஏன் உனது வாளைப் பறித்தார்கள்?"
"அவர்கள் ஏன் உனது வயிற்றில் உதைந்தார்கள்?"
"அவர்கள் ஏன் உன்னைக் கொல்லவில்லை?"
"இந்த நான்கு கேள்விகளிற்கும், பத்து நிமிடத்திற்குள், உனக்கு ஆன்ஸ்ஸர்கள் தெரிந்திருந்தும் நீ கூறாவிட்டால் உனது தலை சுக்குநூறாகி விடும்"

அவ்வளவுதான். விக்கிரமாதித்தன் மயங்கி விழுந்தான். அவனது இந்த விசித்திரமான போக்கு வேதாளத்திற்குப் பயத்தையூட்டியதால், பதில் கேட்க வேண்டுமென்பதையும் மறந்து, பறந்துபோய் முருங்க மரத்திலிருந்த பென்னாம்பெரிய பொந்தொன்றுக்குள் ஒழித்துக்கொண்டது. ●

- ஜெயந்தீஸன்

..............

www.tamilarangam.net




"திரும்பவும் பழைய இடத்துக்கே வரவேண்டி வந்திட்டுதாக்கும்?" என்று கேட்டார் நண்பர்.

"ஏன்..?"இது நான்.

"நீ இந்தியாவைப் பற்றிச் சொல்ல வெளிக்கிட்டாய்.ஆனால் இப்பவும் பழைய விஷயங்கள் பற்றியே கேள்விகள் வந்துகொண்டிருக்குதே?"

"எதைச் சொல்கிறாய்?"

"மனிதம் 11வது இதழ்.தூண்டில் வாசகர் கடிதம்... இப்பிடி வருகுதுதானே?"

மழைத் தூற்றல் சற்று அதிகமாகிவிட்டிருந்தது.சைவக்கடை ஒன்றின் ஓரமாக ஒதுங்கிநின்றுகொண்டிருந்தோம். கடை வாசலிலே தொங்கிக்கொண்டிருந்த பத்திரிகைகளை கழற்றி அடுக்கிகொண்டிருந்தான் கடைக்காரன். மழைத்தூறலுக்குப் பழுதாகிவிடும் என்ற பயம் அவனுக்கு.

இந்தியத் தேர்தலைப் பற்றி சுவாரஸ்யமாக பேசியபடி மழைக்கு ஒதுங்கி நின்றுகொண்டிருந்தார்கள் இன்னும் இரண்டு பேர். ஒருவர் ஏதாவது அரச அலுவலகத்தில் லிகிதராக இருக்கவேண்டும். அவரது கைப்பையும், அதற்கு வெளியே நீட்டிக்கொண்டிருந்த 2 பைல்களும் ,பொக்கற்றில் வைக்கப்பட்டிருந்த 2 பேனைகளும் அதைக் காட்டின. ஆங்கிலமும்,தமிழும் கலந்த ஒருவகை மணிப்பிரவாள நடையில் அவர் பேசிக்கொண்டிருந்தார். கருணாநிதியின் தி.மு.க தோற்றது குறித்து அதுவும் படுதோல்வியடைந்தது குறித்து அவர் மிகவும் அதிர்ச்சியடைந்திருந்தார் எனத்தெரிந்தது.

மற்றவனோ கொஞ்சம் இள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வயது நீற்றாக இருந்தான். அடிக் கொருதரம் தலையைத் தடவி விடுவதும், சேட் கொலரைச் சரி செய்வதும், எட்டி றோட்டோரத் தண்ணீருக்குள் துப்புவதுமாக இருந்தான். அவனுக்கு கருணாநிதியின் தோல்வி அவ்வளவு அதிர்ச்சியைத் தரவில்லை. ராஜீவ் காந்தியின் கொலைக்கு அத்தனை சக்தி இருக்கும் என்பது அவனுக்கு ஏற்கெனவே தெரிந்திருந்ததுபோலும்.

திருவாளர் லிகிதர் தலையை சற்றுக் குனிந்து எங்களைப் பார்த்து ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்துவிட்டு அவனிடம் கேட்டார்: "விஷயம் பெரிசுதான் முடிச்சது என்டு வெளிச்சிட்டுது. என்ன நடக்கப் போகுதோ தெரியேலை..." அவன் பதில் சொல்லவில்லை.

அவனது பதிலை இவர் எதிர்பார்த்ததாகவும் தெரியவில்லை. தொடர்ந்து சொன்னார்: "என்டாலும் இவங்கள் செய்தது சரியான மோட்டுவேலை. ஒண்டில் செய்யிறதென்டால் அம்பிடாமல் செய்திருக்க வேணும். இல்லாட்டி போயிருக்கக் கூடாது. இப்ப இவள் கள்ளப் பிராமணி ஆட்சிக்கு வந்திட்டாள். சினிமாக்காரி. இனி நிலைமை சிக்கலெல்லே போகுது..."

கதைக்கக் கொஞ்சம் பயம் தான். ஆனால் கதைக்காமலிருக்கவும் அவருக்கு முடியவில்லை. மற்றவனுக்கு கதைப்பதில் அவ்வளவு இஷ்டமில்லை. எப்படியும் நின்றுதான் ஆகவேண்டும். வெளியே மழை பெய்கிறது என்பதாலோ என்னவோ கேட்டுக் கொண்டிருந்தான் போல இருந்தது. ஆனால் அவர் பேச்சுக்கு இடைக்கிடை அபிப்பிராயம் சொல்வதன் மூலம் உரையாடல் நின்றுபோகாமல் பார்த்துக் கொண்டான்.

நான் ஒரு சிகரெட் மூட்டிக் கொண்டேன். நண்பர் கண்ணாடிப் போத்தல்களுக்கு மேலால் கை வைத்து இந்தியப் பத்திரிகைகளைப் புரட்டிக் கொண்டிருந்தார். வாடிக்கைக்காரர்கள் என்பதால் கடைக்காரன் தனது மூன்றுநாள் சவரம் செய்யாத முகத்தை இடக்கையால் அடிக்கடி உரஞ்சியபடியே இதைச் சகித்துக் கொண்டிருந்தான்.

மழை விடுகிறபாடாகத் தெரியவில்லை. திடீரென என்னவோ யோசினை வந்தவர்போல் அந்த லிகிதர் தனது மணிக்கூட்டைப்பார்த்துக்கொண்டார். பிறகு யாராவது குடையுடன் வந்த ஒருவருடன் தொற்றிக்கொள்ளும் எண்ணமுடன் கடையின் உட்புறமாகத்

www.tamilarangam.net

திரும்பி நோக்கினார்.

"என்ன நேரமாயிட்டுதோ?" என்று கேட்டான் இளைஞன்.

"ஓம். ரூமுக்குப் போனாத் தான் வெருத்தாஸ் கேக்கலாம்... இவங்கள் போடாங்கள்"என்றார் அவர் கடைக்காரனைப் பார்த்த படி.

நான் நண்பரின் பக்கம் திரும்பி "நீ கேட்டதை நான் கவனிக்கேலை.என்ன கேட்டனி..?"என தொடங்கினேன்.

"அதைப் பற்றிப் பிறகு கதைப்பம் .இப்ப மழை கொஞ்சம் ஓயுமாப்போலை கிடக்கு. வா" என்று நடக்கத் தொடங்கினார் நண்பர்.

நாங்கள் வீதியிலேறி சிறிது தூரம் நடந்ததுமே மழை முற்றாக நின்றுவிட்டது. நண்பரே கதையைத் தொடங்கினார்...

"இந்தியத் தேர்தல் முடிவு பற்றி அந்த மனிசன் என்ன சொல்லிக்கொண்டிருந்தது...?"

"அவருக்கு கருணாநிதியின்ரை தி.மு.க விழுந்தது சரியான கவலை போலை"

"ஏனாம்..?"

"ஜெயலலிதா வாறது எங்களுக்கு சிக்கலாகுமெண்டு நினைக்கிறார்"

"ஏனாம்..?"

"தெரியேல்லை. பொடியனின்ரை மோட்டு வேலையாலை அவன் வெண்டிட்டாள் எண்டு நினைக்கிறார்"

"உண்மையிலை கருணாநிதிக்குப் படு தோல்விதான். ஒரே ஒரு சீற் அதுவும் தன்ரை சீற் மட்டும் கிடைச்சு எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் இல்லாமல் போனது சரியான அடிதான். ஆனால் எவ்வளவு பெரிய பெரும்பான்மை இருந்தாலும் ஜெயலலிதாவுக்கு சரியான நெருக்கடி வர வாய்ப்பிருக்கிறது. தி.மு.க, தி,க. மற்றத் தமிழ் இனவாதக் கட்சிகள் எல்லாம் சேர்ந்து கனக்க அலுப்புக் குடுக்கப்போகுது எண்டது உண்மைதான்..!"

"இல்லை. அவற்றை கதையைப் பார்த்தால் கருணாநிதி வந்திருந்தால் எங்கடை சனத்துக்குப் பாதுகாப்பு எண்ட மாதிரி கதைக்கிறார் போலப்பட்டுது"

"அப்பிடித்தான்.தமிழ்நாட்டுக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்சியளுக்கு எங்கடை பிரச்சினை ஒரு காவிரித் தண்ணீர்த் திருப்பும் திட்டம்,சத்துணவுத்திட்டம்,சாராயத் தவறணைத்திட்டம் இப்பிடி ஒரு திட்டம்தான், தேர்தல் கோஷம்தான் எண்டது எங்கடை கன சனத்துக்கு விளங்குதில்லை.சிலபேர் எவ்வளவு பட்டாலும் விசயத்தை விளங்கிக்கொள்ளுறதில்லை"

"ஆனால் ஒண்டைக் கவனிச்சியா? அவருக்கு ராஜீவைக் கொண்டது அவ்வளவு பிரச்சினையில்லை.புலியள் அதை மாட்டுப்படத்தக்கதாய் செய்ததுதான் பிரச்சினையாம்.."

"ராஜீவ் என்ன ,ஆர் சாகிறதும் ,சாகடிக்கப்படுறதும் பிரச்சினையில்லை சனத்துக்கு. சாவுக்கும் கொலைக்கும் அதிர்ச்சியடையிற நிலைமையளைத் தாண்டியிட்டுது சனம்.அல்லது இவற்றை இயல்பாக ஏற்கிற ஒரு கொலைக்கலாச்சாரம் பரவியிட்டுது. அதோடை சாகடிக்கப்பட்டது ராஜீவ் என்பது ஒருவகையிலை அவைக்குத் திருப்தி தருகிறவிஷயமும்தான்.. ஆனால் அதாலை உள்நாட்டிலையும் இந்தியாவிலையும் ,பிற வெளிநாடுகளிலையும் வரப்போற விளைவுகள்தான் அவைக்கு முக்கியம். அதுவும் குறிப்பா இவர் மாதிரி மிடில் கிளாஸ் ஆக்களுக்குள்ள அச்சமே நம்பிக்கை வைக்க இப்ப யாரும் இல்லை எண்ட கையறு நிலையில் வாற ஒண்டுதான்..... ஆனால்.."

"ஆனால்..?"

"ஆனால் இவையள் ஒருதரும் ஒரு முக்கியமான விஷயத்தைக் கவனிக்கேலை.இந்தியாவிலை எந்த ஆட்சி மாற்றம் வந்தாலும்,இலங்கை மற்றும் எங்கடை போராட்டம் பற்றியமுடிவுகளிலை பெரிய மாற்றம் வராதெ



"உலகத் தமிழர் இயக்கத்தின்ரை ஊர்வலத்துக்குப் போட்டு வந்ததிலயிருந்து அவரேன் புறுபுறுத்துக்கொண்டிருக்கிறார்..?"

"அகதிகளை நாடுகடத்த வேண்டாம் என்டு கத்தப்போனவரை எங்கடை தலைவர் பிரபாகரன் என்டு கத்தச்சொல்லிப்போட்டினமாம்"

— நாதன்

www.tamilarangam.net

ண்டதை இவை நம்புறேல்லை. ஒருவேளை இந்திரா செத்திருக் காட்டி இம்மளவுக்கு தமிழீழம் கிடைச்சிருக்குமெண்டு நம்பிற ஆக்களும் இருக்கத்தான் செய்வி னம்..!"

"சரி. இருக்கட்டும் .நீ முத ல்லை என்ன கேட்டனீ?" என்று நண்பர் முதலில் உரையாடல் தொடங்கின இடத்துக்கு வந் தேன் நான்.

"நீ இந்திய விரிவாதிக்கம் பற்றி எழுதப்போவதாக நினைத் துக்கொண்டு எழுத வெளிக்கிட்டா லும் ,பழைய விடயங்கள் பற்றி இன்னமும் தெளிவுபடுத்த வேண் டியிருக்கிறது அல்லவா என்று கேட்டேன்"என்றார் நண்பர்.

"நீ அப்படி நினைக்கிறாயா? நாங்கள் அதுபற்றிப் பேசியவை களை நான் ஒழுங்காகத்தான் எழுதியிருக்கிறேன். இருந்தும் இப்பிடிக் கேள்விகள் எழும்பிக் கொண்டிருக்குது .இவைக்குத் தொடர்ந்து பதில் சொல்லிக் கொண்டிருக்க வேணும் எண்டு நினைக்கிறாயா?"

"தூண்டில் வாசகர் எழுதின கடிதத்தில் சில விடயங்கள்கேட் கப்பட்டிருக்குது.குறிப்பா ' தவறி ழைக்கும் ஒரு அரசியல் இயக் கம்' என்று புலிகளைப் பற்றிச் சொன்னது கனபேருக்குச் சிக்க லைக் குடுத்திருக்கு. மனிதம் 11 வது இதழில் பாலமோகன் என் பவர் எழுதின கட்டுரையிலும் இது பற்றிக்குறிப்பிட்டிருக்கிறார் கவனிச்சியா?"

"கவனிச்சன்.எனக்கு இதிலை விளங்காதது 'தவறிழைக்கும்' என்பதற்குப் பதிலாக எப்படியெ ழுதியிருந்தால் இந்தச் சிக்கலை தீர்த்திருக்கலாம் என்பதுதான். எனது நண்பர் ஒருவர் 'ஆபத்தா ன தவறுகளை இழைக்கும்' என எழுதியிருக்கலாம் என்று சொன் னார்.."

"பாலமோகனின் கருத்தில் சரியான அரசியலைக் கொண்ட இயக்கங்களும்,பிழையான அரசி யலைக்கொண்ட இயக்கங்களும் தவறிழைக்கலாம்.பிழையான அர சியலைக் கொண்ட இயக்கங்க ளில் புலிகளை அவர் குறிப்பிடுகி றார்.தூண்டில் வாசகரோ புலிக ளின் செயல்களை வெறும் தவறு களாக குறிப்பிடுவதை ஏற்கமுடி யாது என்று கருதுகிறார். உண் மையிலை குறிப்புகளைத் தொட ராகவும் ,முழுமையாகவும் பார்த் தால் இதில் வரும்' தவறுகள்' என்ற சொல் என்ன அர்த்தத் தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பது விளங்கும். புலிகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'தவறிழைக்கும் அரசியல் இயக்கம்' என்று சொல்லப்பட்டது அரசுக்கும் அதற்குமிடையிலான வேறுபாட்டை சுட்டிக்காட்டவேண்டிவந்த ஒரு சந்தர்ப்பத்திலேயே. நீ சொன்னதுபோலை புலிகள் பற்றிய மதிப்பீடும், அவர்களது செயல்கள் பற்றிய விபரங்களும் அவர்களின் சிந்தனை முறையின் தன்மை பற்றிய எமது விமர்சனங்களும் புலிகள் எப்படிப்பட்ட 'தவறு' இழைப்பவர்கள் என்று நாம் கருதுகிறோம் என்பதை புரிந்துகொள்ளப்போதும் என்றே நானும் நினைக்கிறேன்" என்று சொல்லி நிறுத்தினார் நண்பர்.

"ஆனால் ஏன் இப்படி தவறிழைக்கும் அரசியல் இயக்கம் என்று நீ சொன்னதையிட்டு அதிக சிரத்தையை எல்லோரும் காட்டுகிறார்கள்?"

"அவர்களைத் தவறிழைக்கும் என்பதற்குப் பதில் பாசிச, பிற்போக்குக் கும்பல் என்று ஏதாவது ஒரு முறையில் எழுதியிருக்கலாம் என்று வாசகர்கள் எதிர்பார்க்கிறார்கள் போலை"

"புலிகளின் படுகொலைகளும் மக்கள் விரோதநடைமுறைகளும் வெறும் சனனாயக விரோதமல்ல. வெறும் தவறுகள் அல்ல. அவற்றுக்கு மேலான பண்புகளை கொண்டவை என்பது காரணமாக அவர்கள் இப்படிக் கூறுகிறார்கள் என்டு நான் நினைக்கிறேன். உண்மையில் நீதானே இந்தச் சொற்றொடரைப் பாவித்தவன். இதற்கு நீ என்ன பதில் சொல்லப்போகிறாய்?" என்று கேட்டேன் நான்.

"இது பதில் சொல்லுகிறபிரச்சினையல்ல. பார்வை பற்றிய பிரச்சினை. நாங்கள் புலிகளைப் பார்க்கிற பார்வைக்கும், இவர்கள் பார்க்கிற பார்வைக்கும் வித்தியாசம் இருக்கிறது. அதனால்தான் இந்தச் சிக்கல் வருகிறது. புலிகளையும் இலங்கையரசு போன்று எதிரியின் மட்டத்தில் வைக்கும் ஒரு மதிப்பீட்டை நாம் செய்திருந்தால் இந்தச்சிக்கல் வந்திருக்காது..மொத்தமாக என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்காமல் ஒரு வார்த்தையைப்பிடித்துக்கொண்டு கதைக்க வருவது விவாதம் அல்ல. அது தங்களது கருத்தை நிலைநாட்ட முயல்கிற முயற்சியேதவிர வேறொன்றுமில்லை"

"ஆனால் நீ அப்படி ஒரேயடியாக ஒதுக்க ஏலாது .அவையள் சொல்லுறதிலயும் விஷயம் இருக்கக்கூடும் .அதை ஏற்றுக்கொள்ள நாங்கள் தயாராயிருக்க வேணும்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நண்பர் சிரித்தார்."ஏன் சிரிக்கிறாய்..?"என்றேன் நான்.

"இல்லை .சரியான கருத்துகளை ஏற்க நான் தயாரில்லை என்டு எப்ப சொன்னனான்?பிரச்சினை அவர்கள் எதையும் சொல்லவில்லையெண்டதுதானே. உதாரணமாய்ப் பாரன், தூண்டில் வாசகர் ஒருவகையான நசியல் பாணியில் தன்னைச் சுற்றி ஒரு பாதுகாப்பு கவசத்தை எழுப்பிக் கொண்டு தாக்கியிருக்கிறார்.பிரஜைகளுக்குப் பட்டமளிக்கப்படுவது பற்றியும் ,புலிகளுக்கு நற்சான்றிதழ் வழங்கப்படுவது பற்றியும் அவர் கூறுகிறார்.ஆனால் அவர் புலிகளைப் பற்றிச் சொல்கிற தகவல்கள் ஒன்றும் புதியவையல்ல .நாம் ஏற்கெனவே சொன்ன தகவல்கள்தான்! அவற்றையெல்லாம் சுட்டிக்காட்டி புலிகளை எப்படி மதிப்பிடுவது,அவர்களது போக்கு என்ன என்பது பற்றி அவர் அக்கறைப்படவில்லை .எல்லாம் கைமீறிவிட்டது என்று ஒருவகை ஆற்றாமையுடன்,நிலைமையை மதிப்பிடுவதை எள்ளலுடன் பார்ப்பதைத்தான் அவர் செய்கிறார். அடுத்தது என்ன என்ற கேள்விக்கு அவரிடம் இருக்கக்கூடிய பதில் "தெரியாது.. இது நிச்சயமற்ற பாழாய்ப்போன உலகமாச்சே"என்பது தான். இத்தகைய மனோபாவம் எமது மக்களுக்கு உதவாது. நாங்கள் சரியெண்டு பட்டதைச் சொல்லுறம்.ஆராவது பிழையைச் சொன்னால் விவாதித்து திருந்துவம்.சும்மா போகிற போக்கில் அபிப்பிராயம் சொல்லிவிட்டு, அதுக்குப் பதில் எழுதினால் அதைக்கூட எதிர்கொள்ளத் தயாரற்று 'அலட்டல் என ஒதுக்கிவிட்டு மக்களின் விடுதலைக்காகச் சிந்திப்பதாக எழுதலாம்' என்று ஒரு பாதுகாப்புக் கவசத்தைப் போட்டு அதனுள் ஒளிப்பது ஆரோக்கியமானதல்ல. பிரஜைகள் தங்களை தூய்மவாதிகளாக காட்ட முயல்வதாகச் சொன்னது கூட ஒரு பொறுப்பற்ற குற்றச்சாட்டு .நாங்கள் எங்களைத் தூய்மைவாதிகளாகக் காட்ட எப்போதும் முயன்றதில்லை.மற்றது அப்படி இருப்பது சாத்தியமும் இல்லை. அப்படி ஒன்றும் பொய்மையான பிரமைகளை எம்மைப் பற்றி உருவாக்கும் அவசியம் எமக்கு இல்லை. ஏனென்றால் பொய்மை நீண்டநாள் நிலைக்கப் போவதில்லை..."

"ஏன் ஆத்திரப்படுறாய்..?"

"ஆத்திரப்படவில்லை. நாட்டின்ரை நிலைமை தெரியுதுதானே? நிலைமை இவ்வளவு மோசமானதாகிப் போனபிறகும் விடயங்களை விவாதிக்கிறதிலை காட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

" ஜெயலலிதாவை ஆதிபராசக்தியென்டு சொல்லி எம்.எல்.ஏ.க்கள் எல்லாரும் சட்டசபையிலை செருப்பைக் கழட்டிக் கையிலை வைச்சுக்கொண்டு காலிலை விழுந்து கும்பிட்டினமாம்!!!"

" ஏமாளிப் பக்தர்மார் இருக்குமட்டும் பூசாரிகளின்ரை கெட்டித்தனம் கொடிகட்டிப் பறக்கும்"

— இன்னன்னா



டிற அக்கறையைவிட அதை நையாண்டி செய்யிறதிலை இருக்கிற அக்கறையை நினைக்க எரிச்சல் வருகுது. ஆனால் அதுக்கு என்ன செய்யமுடியும்.. நீ மனிதம் 11வது இதழ் படிச்சியா?"

"படிச்சன்.அதிலை வந்த ஐக்கியமுன்னணி பற்றின கட்டுரையைப் பற்றித்தானே கேக்கிறாய்" என்றேன் நான்.

"ஓம்.அதுதான்.உனக்கு அது எப்படி இருந்தது?"

"உண்மையிலை அந்தக் கட்டுரையும் ஒருவகையிலை எங்களுக்குப் பதில் சொல்வதாகத்தான் அமைந்துள்ளது. ஆனால் ஐக்கிய முன்னணி பற்றிய எங்கடை உரையாடலை அவர்கள் சரியாய் விளங்கிக்கொள்ளேலை என்டு நினைக்கிறன்"

"இல்லை. ஐக்கிய முன்னணி பற்றிய எங்கடை கருத்தை விளங்காமல் இல்லை.ஆனால் அதை தங்கடை கருத்து அடிப்படையிலை விளக்க முயன்றிருக்கிறார் அக் கட்டுரையாளர்.புலிகளுடைய தேக்கத்திற்கான காரணங்களை ஆராய்கையில் அதன் ஐக்கிய முன்னணிக்கு எதிரான நிலைப்பாட்டையும் ஒரு காரணமாக நாங்கள் சொன்னதை வைத்துக் கொண்டு(ஐக்கிய முன்னணியைக் கோருவதாக் காட்டி) எமது மதிப்பீட்டை நிராகரிப்பதே அவரது நோக்கமாகும் .உண்மையில் அவர் நினைப்பது அல்லது சொல்வதுபோல் ஒவ்வொருகணமும் 'ஐக்கிய முன்னணி ,தேசிய சக்தி' என்ற 'தாரகமந்திரத்தை' உச்சரிப்பது நாங்கள் அல்ல.நிதானமாக யோசித்தால் அப்படி நினைப்பது அவரது ஒரு பிரமையே என்பது அவருக்கே தெரியும். அவருடைய கருத்துத்தான் புலிகளையே,புலிகளை மட்டுமே மையமாக வைத்து,அவர்களை எதிர்

www.tamilarangam.net

ப்பதை அத்திவாரமாகக்கொண்டு வளரத் துடிக்கிறது. அதனால் தான் எங்கடை எதிர்ப்பு யுத்தம் தேசிய சக்தி என்பவற்றை எல்லாம் தாக்குவதில் கவனம் செலுத்தியிருக்கிறார்"

"ஆனால் அவர் சொல்லியுள்ளதை நீ கவனித்தாயா? இலங்கை அரசினுடைய சிங்களபௌத்த பேரினவாதத்திற்கும் ,புலிகளின் அழிவு அரசியலுக்கும் எதிராகப் போராடவேண்டும் என்கிறாரே?"

"சொல்கிறார்.போராடவேண்டும் என்பது பொதுப்படையானது. அதில் எங்களுக்கும் வேறுபாடு இல்லையே?ஆனால் என்ன போராட்டம்? எப்படிப்பட்ட போராட்டம்? அது ஆயுதப் போராட்டமா இல்லையா? என்ற விடயங்களை கூட அவர் தெளிவுபடுத்தவில்லை. அதுவும் அவருக்கு முக்கியமாகப் படவில்லை.சில மார்க்சியவாதிகளைத் தாக்குவதிலை அவருக்கு இருக்கிற அக்கறை அதை விளங்கப்படுத்திறதிலை இல்லாதது தான் ஆச்சரியம்!அந்தக் கட்டுரையின்ரை சாரமே எமது ஐக்கியமுன்னணி பற்றிய கருத்தைத் தனது அபிப்பிராயத்தின் அடிப்படையில் புரிந்துகொண்டமையே! அந்தக் கட்டுரையில் தான் எதிர்க்கிற கருத்துள்ளவர்களைத் தாக்குவதில் உள்ள கவனம் கருத்துகளை முன்வைப்பதில் இல்லை"

"அந்தக் கட்டுரைக்கும்,தூண்டிலிலை வந்த "இன்றைய யுத்தம்..."என்ற கட்டுரைக்கும் ஒரு உறவு இருப்பது உனக்குத் தெரியவில்லையா?"

"உறவென்ன?இரண்டும் ஒருவரே எழுதியிருக்க வேணும் என்றே தோன்றுகிறது.வெவ்வேறிடங்களில் ஒரே நேரத்தில் தாக்குகிற இந்த நடவடிக்கை வரவேற்கப்படவேண்டியதுதான்... ஆனால் தாக்குதல் கருத்துரீதியாக இல்லாததுதான் பெரிய சோகம்"

"ஏன் அதில் சோகிக்க என்ன இருக்கிறது?"

"இந்த இரண்டு கட்டுரைகளும் 'அழிவு அரசியல்' ,' அழிவு யுத்தம்' என்ற கருத்துகளை முன்வைக்கின்றன.இந்த முடிவுகளைப் பற்றி நாம் பரிசீலனை செய்வதற்கு ஏற்ற விதத்தில் அவைகளை இக் கட்டுரைகள் விளக்கவேயில்லை .தடுப்பு யுத்தம் என்பதையும் சரி,ஐக்கிய முன்னணி என்பதையும் சரி, எல்லாவற்றையும் பற்றிய எமது கருத்தை ஒருவகை எதிர்ப்புணர்வுடன் எதிர்கொண்டுவிட்டு ,திருப்பித் தாக்கி

www.tamilarangam.net

யிருக்கின்றன இக் கட்டுரைகள். புதிய கருத்துகள் விவாதத்திற்குரிய விதத்தில் வராமல் வெறும் தாக்குதலாக வருவது சோகம் தானே!விவாதம்தான் புதிய வழியைக் காட்ட உதவமுடியும் என்றால் விவாதத்திற்குரிய வாய்ப்பில்லாதபோது கவலைவரத்தானே செய்யும்?"

"மொத்தத்தில் இந்த இரண்டு கட்டுரைகளையும் பற்றி என்ன தான் சொல்கிறாய்?"

"சொல்ல ஒன்றுமில்லை.எம் மீதான தாக்குதலை வடித்தெடுத்துவிட்டுப் பார்த்தால் அதில் புதிதாக ஒன்றுமேயில்லை.புலிகளை எதிர்ப்பது மட்டும்தான் தெரிகிறது.அரசு சில இடங்களில் புலிகளைவிட மேலானதாகக்கூடப் போய்விடுகிறது .எல்லாவற்றிற்கும் மேலாக கட்டுரைகளுக்கு அடுத்தது பற்றிய அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு வேளை அதுதான் அக்கட்டுரை எழுதியவர்களின் மார்க்சியமோ என்னவோ?!"

இதற்குப் பிறகு இருவரும் எதுவும் பேசாமல் நடந்தோம். வீதியில் வாகனங்களின் ஓட்டமும் குறைவாகவிருந்தது. நேரம் எட்டரைக்கு மேலாகியிருக்கும் என்றுபட்டது.

"தன்னை மிரட்டி அலுவல் பாக்க முடியாது என்று கம்புறுப்பிட்டிய கம்உதாவவிலை நிண்டு கொண்டு பேசினார் சனாதிபதி! போனமுறை உவர் கண்டி கம்முதாவவிலை நிண்டு பேசேக்கை தான் யுத்தம் வெடிச்சது!அதிலை இருந்து இதுவரை ஒரு முன்னேற்றமும் இல்லை எண்டு சனம் முணுமுணுக்குது!!" என்றார் நண்பர்.

"சனமெங்கை முணுமுணுக்குது? நீ சும்மா கனாக் காணாதை.கசினோவை நிப்பாட்டி ,ஜாக்பொட் மிசினை பறிமுதல் செய்து, புத்த பிக்குகள் சொல்லுறபடியெல்லாம் செய்வன் எண்டு சொன்னவுடனை பிரேமதாசவெல்லோ தலைவர் எண்டு சனம் சந்தோசப்படுகுது. நீ சும்மா முணுமுணுக்குது எண்டு நினைக்காதை .உனக்குத் தெரியுமே இப்ப அவனுக்கிருக்கிற செல்வாக்கை? முழுச் சனமும் அவனைத்தான் பாராட்டுது .ஜே. ஆர். போனவுடனை பிரேமதாச வந்து ஒரு ஆறுமாதத்திற்கு மேலை தாக்குப்பிடிக்க மாட்டானெண்டு சொல்லிச்சினம். இப்ப இவ்வளவு காலமும் அவன் இருந்து காட்டித்தானேயிருக்கிறான். யு.என்.பி. எண்டால் பிரேமதாச பிரேமதாச எண்டால் யு.என்.பி. அரசாங்கமே அவன்தான்.அவன் ஒருதன்தான் இந்த நாட்டில் 24



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மணி நேரமும் மக்களுக்காகச் சிந்திக்கிறவன் எண்டதுமாதிரித் தான் சனம் பேசுது.இரவு 12.30 க்குப் பேச்சுவார்த்தை நடத்தும் பிரேமதாச காலை 3.30மணிக்கு வீட்டு வாசல்லை சனங்களைச் சந்திக்கிறான் .அவன் நித்திரையே கொள்ளுறயில்லையெண்டு தான் சனம் நினைக்குது!" என்றேன் நான்.

"உதுதான் முக்கியமான பொயின்ற்.பிரேமதாசவின்ரை மலின அரசியல் - பொப்புலிஸ்ட் எண்ட சொல்லுக்கு இது சரியான தமிழோ தெரியாது - உதிலைதான் அத்திவாரம் கொண்டிருக்குது. உந்த விஷயத்திலை எம்.ஜி.ஆர் தான் பிரேமதாசவுக்கு குரு. இப்ப 'அவர் 'கடவுளாகி'விட்டார். பிரேமதாச நவீன புத்த அவதாரமெண்ட அளவுக்கு இல்லாவிட்டாலும்,நவீன அசோகன் என்றளவுக்காவது மக்களாலை மதிக்கப்படுகிறளவுக்கு அவன் திட்டமிட்டு இயங்குகிறான்.பௌத்தமதத்தையும்,மத குருக்களையும் மன்னர் கால- பொற்கால- அந்தஸ்துக்கு கொண்டவரப்போவதாகக் கூறும் பிரேமதாசவின் 'மலினத்துவம்' தனது மகளை 'தியவதனநிலமே' (விகாரை தர்மகத்தா)ஆக்குவது போன்ற பல்வேறு திட்டங்களை உள்ளடக்கியது. அது கேள்விக்கு அப்பாற்பட்ட ஒரு தலைவரையும் இரண்டாம் மட்டம் இல்லாதஒரு கட்சியையும் ,பிரபுத்துவ முறையிலான உறவுகளையும் உருவாக்குவதற்கு முயல்கிறது. இது சரியான டேஞ்சராகப் போகப்போகிறது.சரியாகச் சொல்வதானால் ஜே.ஆர். காலத்தைவிட மோசமான ஜனனாயக மறுப்பும், படுகொலைகளும், வஞ்சகமும் இப்போது இருக்கிறது .ஜே.ஆர் காலத்தில் சட்டம் மூலம்தான் அநேகமானவை செய்யப்பட்டது. இப்போதோ சட்டம் எப்போதாவதுதான் பயன்படுகிறது. மற்றவைகளைக் குண்டர் கூட்டமும், பரா மிலிட்டரி குழுக்களும் இரகசியமாகச் செய்துவிடுகின்றன. உண்மையில் ஒரு சிஸ்ரமற்றிக்கான பாசிசம் வளர்ந்து வருகிறதை வலு இலகுவில் முகரக்கூடியதாக இருக்கிறது!ஆனால் கன பேருக்கு இது விளங்குதில்லை. நான் சனம் முணுமுணுக்கத்தொடங்கியிட்டுது எண்டது பிரேமதாசவின்ரை பொப்புலிஸ அரசியல் தொடர்பாக எதிர்ப்பு கொஞ்சமாவது கிளம்பத் தொடங்கியிருக்கு எண்டுதான்..."

"ஆர் எஸ்.எல்.எஸ்.பி. யைச் சொல்லுறியோ?"என்றேன் நான்.

"இல்லை . பொதுவாக'.ஆனால் நான் கவனமெடுத்தது சிங்கள முற்போக்குச் சக்திகளை.."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"எட.. அது என்ன பெரிசாய் செய்யப்போகுது!சிங்கள முற்போக்குச் சிந்தனைக்கு முழாங்காலுக்குக் கீழை ஒண்டும் இல்லை.அது அப்பிடியே இருக்கும்.அசையாது" என்றேன் நான் எரிச்சலுடன்.

" இல்லை .பிரேமதாசவின் பொப்புலிஸம் பற்றிய புரிதல் கணிசமானளவு பரப்பப்படுகிறது. நீ கவனிச்சால் தெரியும்.ஆனால் அதைவிட முக்கியம் இது தமிழ் மக்களுக்கு மிகப்பெரிய ஆபத்து என்டதுதான்.."

"புலிகளைவிட பெரிய ஆபத்து தமிழ்மக்களுக்கு வேறை என்ன வரப்போகுது?" என்றேன் நான் .இந்த வசனத்தை எனது நண்பனொருவன் சொன்னநாளிலிருந்து எங்கே பாவிப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தேன். நல்ல சந்தர்ப்பம் வாய்த்தது.

நண்பர் சிரிக்கவில்லை."இது புலிகளைவிட ஆபத்தானது.பௌத்த பேரினவாதம் மன்னர் கால வடிவைப் பெறுவதென்பதும்,தமிழினத்தை இல்லாமல் செய்வதென்பதும் ஒன்றுதான்.."

" தூண்டில் கட்டுரையாளர் வேறுவிதமாகச் சொல்கிறாரே?"

"அது ஒருவிதமான கனவு நிலை விமர்சனம். அதை விடு. அப்பிடியான நம்பிக்கை ஈ.பி.டி.பி.யிடம் கூட இருக்கும் என்டு நான் நினைக்கேலை.எப்பிடியோ இப்ப பிரேமதாச கம்புறுப்பிட்டி கம்முதாவ முடிஞ்சு வந்த வுடனை பேச்சுவார்த்தையைத் தொடங்கலாம்.குண்டுவெடிப்புக்கு பிறகும் இராணுவத் தீர்வு எமது நோக்கமில்லை என்று பிரேமதாச அறிவித்திருப்பதால் நான் சொல்லவில்லை.ஆனால் இது நடக்கப்போகுது. புலியளும் பேச தயாராயிட்டினம். புலியளோடையும், மற்றக் கட்சியளோடையும் பிரேமதாச வரவிருக்கிற முடிவு இதுதான்..."

"எது?"

"எல்லாம் தரலாம்.தமிழீழத்தைத் தவிர!"

"அது சரிதானே?!"

"பிரேமதாசவின் எல்லாம் சமன் சைபர் ;தமிழீழம் சமன் எல்லாம்!"

"நீ என்ன சொல்லுறாய்?"

"நான் சொன்னது உண்மை. நீ இருந்து பார்.வடக்கு,கிழக்கு இணைப்பைக்கூட ஒருநாளும் பேமனன்ராக்கும் வேலை நடக்

www.tamilarangam.net

காது.. பேரினவாதம் வரவர வலுவாகிக்கொண்டிருக்கிறவிதம் அப்பிடித்தான் காட்டுகிறது"

"கொக்கட்டிச்சோலைச் சம்பவத்துக்கு ஆணைக்குழு நியமிச்சு விசாரிக்கப்போறதைப் பற்றி அப்ப என்ன சொல்லுறாய்?"


"விசாரணை நடத்துறது எல்லாற்றை கண்ணிலையும் மண்ணை தூவ.பிரெஞ்சு டொக்ரர்மாற்றை வானுக்குச் சுட்டதுக்கு விசாரிச்ச மாதிரித்தான் இருக்கும்"

"அப்ப என்னதான் சொல்லுறாய்?"

"பிரேமதாசவும் அவன்ரை அரசும் `பேச்சுவார்த்தை 'மூலம் பிரச்சினையைத் தீர்க்கிற ஏதாவது `தீர்வை' முன்மொழியிற அரசு என்று கனவுகாணத் தேவையில்லை. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தைவிட குறைவான ஒன்றை சிலவேளை பிரேமதாச முன்மொழியக் கூடும். இது விளங்க வேணும். அதுதான் முக்கியம்"

நேரம் நன்றாக ஏறிவிட்டிருந்தது. நான் நண்பரிடம் விடைபெற்றுக்கொண்டு வீடு நோக்கி நடந்தேன்.

●






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# செய்திக் குறிப்பு

01.06.91 வீரகேசரி

வவுனியா நொச்சிமோட்டை பாலத்தருகே 10 தமிழர்கள் இராணுவத்தால் கட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

02.06.91 வீரகேசரி

மண்டபம் முகாமிலிருந்து 36 தமிழ் அகதிகள் காணாமற் போயுள்ளனர்

03.06.91 வீரகேசரி

திருகோணமலையில் 5 தமிழர்கள் இராணுவத்தினரால் கொல்லப்பட்டுள்ளனர்.

05.06.91 வீரகேசரி

புலிகளுக்கும், அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையொன்றிற்கு முயற்சிகள் நடக்கின்றன – ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர்

06.06.91 வீரகேசரி

அம்பாறை மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த தமிழர்களில் 300இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் கடந்த 3 மாதங்களுக்கு மேலாக எதுவித நிவாரணமுமின்றி பட்டினியில் வாடுகின்றன.

மட்டக்களப்பு கோவில் போரதீவில் 17 இளைஞர்கள் அரசபடையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

07.06.91 வீரகேசரி

ராஜீவ் கொலை செய்யப்பட்டதை தொடர்ந்து இதுவரை தமிழ்நாட்டில் 47 இலங்கைப் போராளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

08.06.91 வீரகேசரி

ஆகாயமார்க்கத் தாக்குதலில் இருந்து தப்பும் நோக்குடன் பாடசாலை மாணவர்கள் பதுங்குகுழி வெட்டிக்கொண்டிருந்த வேளை அவர்கள் மீது நடந்த விமானத் தாக்குதலால் ஒரு தாயும், மகளும் கொல்லப்பட்டனர்.

10.06.91 வீரகேசரி

வந்தாமூலையில் இராணுவத்தினரால் 6 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கண்டி பல்லேகலையில் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் காணிகள் வெளியாருக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. ஆனால் மேற்படி தோட்டத்தில் கடந்த 100 வருடங்களுக்கு மேலாகப் பரம்பரையாகக் குடியிருந்த தோட்டத் தொழிலாளர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் இத்தொழிலாளர்களின் குடியிருப்புகளை சுற்றியுள்ள காணிகள் அனைத்தும் வெளியாருக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டநிலையில், காணி பெற்றுள்ளவர்கள் அநுமதித்தால் மாத்திரமே இத்தொழிலாளர்கள் வெளியே சென்று வரக்கூடிய நிலைமையிலுள்ளனர்.

மாத்தளையில் சோதனையிடுவதாக கூறி தொழிலாளர் வீடுகளுக்குள்புகுந்து கோஷ்டியொன்று ஆயுதமுனையில் அவர்களை அச்சுறுத்தி உடைமைகளைக் கொள்ளையடித்துச்சென்றுள்ளது.

11.06.91 வீரகேசரி

இலங்கை அரசபடைகளுக்கும், புலிகளுக்குமிடையே நடைபெறும் யுத்தத்தில் கடந்த 1 வருடத்தில் மட்டும் சுமார் 7ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

தோட்டங்களில் பென்தன் எடுத்தவர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்த தேயிலைத் தூள் நிறுத்தப்பட்டுள்ளது.

தஞ்சாவூரில் 3 இலங்கை அகதிகள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

13.06.91 வீரகேசரி

இலங்கை அரசாங்கம் தம்முடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளை நடத்த முன்வரவேண்டும் என்று புலிகள் இயக்கம் சார்பில் திலகர் ஜேர்மனியிலிருந்து அழைப்பு விடுத்துள்ளார். பெயர் குறிப்பிடாத ஐரோப்பிய நாடொன்றில் நடுவர்கள் முன்னிலையில் இலங்கையரசுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளை நடத்தப் புலிகள் இயக்கம் தயாராக இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் 15 இலட்சம் வீடமைக்கும் திட்டத்தின் அடிப்படையில்பல் வேறு பகுதிகளிலும் மாதிரிக் கிராமங்களை அமைத்துவருகிறது. ஆனால் மலையக மக்களுக்கு இதுவரை 1 துண்டுக் காணியோ, வீடோ வழங்கப்படவில்லை. மலையக மக்களுக்கு உரிமைகள் கிடைத்துள்ளன என்பது வெறும் பிரச்சாரமே-தொ.தே.ச.

14.06.91 தாயகம்

இந்தியாவிலிருக்கும் இலங்கை அகதிகள் குறித்த தகவலைத் தருவதாக இந்தியா இலங்கையரசுக்கு உறுதியளித்துள்ளது.

கோண்டாவிலைச் சேர்ந்த 75 வயது வயோதிபர் ஒருவர் புலிகளால் கப்பம் கேட்டுக் கடத்தப்பட்டுள்ளார்.

இது ஒரு அதிகாரத்திற்கான விளையாட்டு. புலிகளும், அரசும் தங்களை உறுதிப்படுத்தி பேச்சுவார்த்தையில் பலம் பொருந்தியவர்களாக சந்திக்கவே விரும்புகின்றன. இரண்டுக்கும் அதிகாரம் முக்கியமானதாகிவிட்டது இரு தரப்பும் ஒரு வெறும் எல்லையில் சண்டையிட்டால் அதனால் பிரச்சினையில்லை.-இருவரும் இறுதிவரை போராடலாம். ஆனால் எங்கள் பிரச்சினை சண்டை நடைபெறுமிடத்தில் லட்சக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள் என்பதுதான். இரு தரப்பினருமே மக்கள் குறித்து அக்கறை கொண்டவர்களாகத் தெரியவில்லை.- சுனில் அபேசேகர

சுதந்திரமாக அகதிகளுக்குச் சேவைசெய்ய முயன்ற பல மாணவர்கள் புலிகளின் கீழ்தான் அவ்வாறு செய்யமுடியும் என்றவுடன் விரக்தியில் விலகிவிட்டார்கள். விடுதலையின் பெயரால் ஊக்குவிக்கப்பட்டதெல்லலாம் தனிமனித பேராசைகளும், சுயநலமும், பொய்களும், சந்தர்ப்பவாதமுமே. இந்த அரசியலுடன் சேர்ந்து வளர்ந்ததெல்லாம் அழிப்பதற்கான தற்கொலை எண்ணத்தால் ஊக்குவிக்கப்பட்ட சமூக விரக்திதான். வாழ்வுக்கு அர்த்தம் கொடுக்கவேண்டிய போராட்டம் வாழ்வுக்கு மரணத்திலேயே அர்த்தம் கற்பிக்கிறது - மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்

வடபகுதியில் புலிகளின் முத்தமிழ் - விழா பிரம்மாண்டமான சிகரங்கள் கட்அவுட்கள், கோபுரங்கள் சகிதம் நடைபெற்றுவருகிறது. ஏறக் குறைய 1 கோடி ரூபா மதிப்புள்ள சோடனைகளும், பேனர்களும் கட்டப்பட்டுள்ளன.

14.06.91 வீரகேசரி

கொக்கட்டிச்சோலையில் பாடசாலை மாணவர்கள் உட்பட 100 க்கும் மேற்பட்டோர் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். பல வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன காயமடைந்தவர்களை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்வதற்கும் வெளியார் யாரும் அனுமதிக்கப்படவில்லை. செஞ்சிலுவைச் சங்கத்திடம் - தெரிவிக்கப்பட்ட புகாரின்படி150 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இலங்கையரசும், அரசியல் கட்சிகளும் ஒரு தரப்பாகவும், புலிகளும் ஏனைய தமிழ் அமைப்புகளும் மறு தரப்பாகவும் இந்தியா அதனது பிராந்நிய மேலாதிக்க நலனை முந்தள்ளாத வகையில் மூன்றாவது தரப்பாகவும் செயற்பட்டு முன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தையின் அடிப்படையிலான அரசியல் தீர்வே தேசிய இனப்பிரச்சினைக்கு குறைந்தபட்சத் தீர்வை கொண்டுவரவுள்ள சரியான வழிமுறையாகும்-பு.ஜ.க

வொய்ஸ் ஒவ் அமெரிக என்ற அமெரிக்க வானொலியின் அஞ்சல் நிலையத்தை சிலாபம் நாத்தாண்டியா பகுதியிலுள்ள இரணவில என்ற இடத்தில் அமைப்பதற்கான நிர்மாண வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

15.06.91 வீரகேசரி

கொக்கட்டிச்சோலையில் மாணவிகள் அரசபடைகளினால் பாலியல்வன்முறைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

கொக்கட்டிச்சோலை சம்பவத்தையடுத்து அச்சம் காரணமாக நூற்றுக்கணக்கானோர் தாளங்குடாவில் தஞ்சமடைந்துள்ளனர்.

ஹக்மனை பொலிஸ்நிலையத்தில்வைத்து மருத்துவ மாது ஒருவர் உடம்பு முழுவதும் சூடான அயர்ன்பொக்ஸினால் எரிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தியாவில் இலங்கைத் தமிழ்அகதிகள் தங்கியிருக்கும் முகாம்களுக்கு குடிநீர் வழங்கும் நீர் நிலைகளில்– விசத்தைக் கலக்க சிலர் முயற்சி செய்துள்ளனர்.

மண்டபம் அகதிமுகாமிலிருந்த இலங்கை அகதிக்குடும்பத்தின் 9மாதக் குழந்தையொன்று இனந்தெரியாதவர்களால் கடலில் வீசிக் கொலை செய்யப்பட்டுள்ளது.

மக்கள் தஞ்சமடைந்திருந்த மகிழடி தீவு பாடசாலையைச் சுற்றிவளைத்த இராணுவம் 16க்கு மேற்பட்ட ஆண்களைக் கைது செய்து குண்டு வெடித்த கிடங்கில் போட்டு எரித்துள்ளது. மகிழடித்தீவு, முனைக்காடு, குறிஞ்சாத்தீவு, கொக்கட்டிச்சோ–லைப் பகுதிகளில் 50க்கு மேற்பட்டோர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு அப் பகுதியிலுள்ள – அரிசி ஆலையில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

மகிழடித்தீவில் 40 வீடுகள் அந்த வீடுகளிலிருந்த பெண்கள், குழந்தைகளுடன் எரிக்கப்பட்டுள்ளன.

18.06.91 வீரகேசரி

யாழ்குடாநாட்டில் புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கும் முஸ்லீம்கள் அனைவரையும் விடுதலைசெய்ய மனிதாபிமான அடிப்படையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் உதவவேண்டுமென முஸ்லீம் காங்கிரஸ் வேண்டுகோள் விடுத்துள்ளது.

திருகோணமலையில் பெண்ணொருவர் இனந்தெரியாதோரால் கொல்லப்பட்டுள்ளார்.

தலவாக்கலையில் 2 தமிழ்வாலிபர்கள் சிவில் உடையில் வந்தோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். இரவு நேரங்களில் கெடூரன வாகனங்களில் தோட்டங்களுக்குள் நுழையும் சிவில் உடை தரித்த குழுவினர் தோட்டப்புற இளைஞர்களை கடத்திச் செல்லும் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

20.06.91 வீரகேசரி

நெலுக்குளத்தில் 7பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

வவுனியாப் பகுதியில் 120 தமிழர்கள் அரசபடைகளினால் கொல்லப்பட்டுள்ளனர்.

நாட்டின் ஒரு பகுதியில் நிலவும் யுத்த நிலைமையைச் சமாளிக்கப்– பெருமளவு நிதி தேவைப்படுவதாக அரச கட்சி எம்.பி. பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

21.06.91 வீரகேசரி

வவுனியாவுக்கு மேற்கே இராணுவத்தினரால் 40 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கொக்கட்டிச்சோலையில் இடம்பெற்ற தமிழ்மக்கள் படுகொலைகளை போன்று வல்வெட்டித்துறை, தங்கவேலாயுதபுரம் ஆகிய பகுதிகளிலும் படுகொலைகள் இடம்பெற்றுள்ளன.

22.06.91 வீரகேசரி

கொக்கட்டிச்சோலைச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்யவென ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. ஐ.தே.க. அரசு பதவிக்கு வந்தநாள் முதல் எத்தனையோ ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால்அந்த ஆணைக்குழுக்கள் செய்ததெல்லாம் எதுவுமே இதுவரை நடைமுறைப்படுத்தப்படாதவைகள்தான். உயர் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக்காணப்பட்டு அபராதம் விதிக்கப்பட்ட பொலிஸ் அதிகாரியின் அபராதத்– தொகையையும் செலுத்தி, அவருக்கு பதவியுயர்வையும் வழங்கியதுதான் இந்த அரசாங்கம்.

மாலைதீவிலே அரசைக் கவிழ்க்கச் சதி செய்த புளொட்டை அங்கிருந்து விடுவித்த இலங்கையரசு அவர்களை வவுனியாவுக்கு அனுப்பி தமிழ் மக்களுக்கெதிரான சண்டையில் ஈடுபடவைத்திருக்கிறது.

23.06.91 வீரகேசரி

இராணுவத்தினரால் வவுனியாவில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் 250 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

24.06.91 வீரகேசரி

கொழும்பு மற்றும் சுற்றுப்புறங்களில் அரசபடையினரின் தேடுதல்வேட்டைகள் மும்முரமாகியுள்ளன. புறக்கோட்டைப் பகுதியிலிருந்து 46இளைஞர்களும், வெள்ளவத்தையில் 14 இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் தேசியப் பிரச்சினையைத் தீர்த்து

www.tamilarangam.net

வைப்பதற்கான மிகவும் பொருத்தமான அடிப்படையாக 1987யூலை இலங்கை–இந்திய சமாதான உடன்படிக்கையையே தொடர்ந்து பேணி இருநாடுகளினதும் பரஸ்பரம் நலன்களை மனதில் கொண்டு மீண்டும் புதிய ஐக்கபூர்வமான முயற்சிகள்மேற்கொள்ளப்பட வேண்டும்– இந்திய புதிய பிரதமருக்கு ஈ.பி.ஆர்.எல்எவ். வாழ்த்துச் செய்தி.

கண்டியில் மனித பாவனைக்கோ, கால்நடைகளின் பாவனைக்கோ உதவாத மக்கிப்போன, வண்டுக்ள் மண்டிய, துர்நாற்றம் வீசும் மிகப் பழைய கோதுமைமா உணவுக்கட்டுப்பாட்டு திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்டு கண்டி மாநகரக் கடைகளிலும், கண்டி மாவட்டத்திலுள்ள கூட்டுறவுக்கடைகளிலும் விற்பனை செய்யப்படுகின்றன. இந்த மக்கிப் போன மாவை அப்பாவி பாமர ஏழை மக்களில் சிலர் வேறுவழியின்றிப் பாவித்து வருவதால் மிகப் பயங்கரமான தொற்றுநோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

25.06.91 வீரகேசரி

தாங்கள் விரும்பியவாறு பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதில் ஒருவரும் வெற்றி பெறமுடியாது – பிரேமதாச

27.06.91 வீரகேசரி

இலங்கைப் பெண்களை மணப்பெண்களாக இத்தாலியருக்கு விற்பனைசெய்யும் முயற்சி இத்தாலிச் சஞ்சிகை ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது. இலங்கையர் ஒருவர் குறைந்தவிலையில் இலங்கை மணப்பெண்கள் என அச் சஞ்சிகையில் விளம்பரப்படுத்தியுள்ளார்.

கூட்டுப்படைத் தலைமையலுவலகம் தாக்கப்பட்ட பின் மேலும் 60தமிழர்கள் கொழும்பில் கைதசெய்யப்பட்டுள்ளனர்.

அம்பாந்தோட்டைப் பகுதியில் கப்பம் கொடுக்காததினால் ஒருதாயும், 2 பிள்ளைகளும் கத்தியால்குத்தி கொல்லப்பட்டுள்ளனர்.

28.06.91 வீரகேசரி

இளம்பெண்கள் உட்பட 100க்குமேற்பட்ட தமிழர்கள் கொழும்பில் – கைது செய்யப்பட்டுள்ளனர்.

முஸ்லீம் சமூகம் ஏற்கக்கூடிய ஒரு தீர்வைக் காண்பதற்கு தங்களுக்கு உதவவேண்டும் என மு.கா ஜெயலலிதாவுக்கு சுவேண்டுகோள் விடுத்துள்ளது.

26.06.91 வீரகேசரி

திருகோணமலை மாவட்டத்தில் உப்புவெளி முதல் சாம்பல்தீவுவரை 4 ஆயிரம் சிங்கள மக்களைத் தமிழ் மக்களின் காணிகளில் குடியேற்றுவதற்கான முயற்சிகள் அப் பகுதியைச் சேர்ந்த மதகுரு ஒருவரால் மேற்கொள்ளப்படுகின்றன.

செங்கலடிப் பகுதியில் 3 பெண்கள் உட்பட 9பேர் புலிகளினால் சுட்டு கொல்லப்பட்டுள்ளனர்.

29.06.91 வீரகேசரி

பொத்துவிலிலிருந்து கொழும்புநோக்கிவந்த தனியார் பஸ் வண்டியின்– மீது புலிகள் தாக்குதல் நடத்தியதில் 14 பயணிகள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களின் சடலங்கள் பஸ் வண்டியுடன் சேர்த்து எரிக்கப்பட்டுள்ளது.

படையினருக்கே அவர்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியாதிருக்கும்– போது பொதுமக்களை எவ்வாறு பாதுகாக்கப்போகின்றார்கள் என சிலர் கேள்வியெழுப்புகின்றனர் – பிரேமதாச

30.06.91 வீரகேசரி

தமிழ் மக்களுக்குப் புலிகள் ஆயுத மூலம் விடுதலையைப் பெற்றுக்கொடுக்க முயன்றுவருகின்றனர். ஆனால் அந்த விடுதலையை நான் அகிம்சை மூலம் பெற்றுக்கொடுத்தே தீருவேன் – பிரேமதாச

" வடிவாய் கேட்டனியோ? என்ன சொன்னவங்கள்..?"

"எண்பத்தெட்டுக்கு முதல் வந்தாக்களை அனுப்புறயில்லையாம்.பிறகு வந்தவையை அனுப்புறதுதானாம்..."

"உன்ரை டொச்சும் அப்பிடி, இப்பிடி! உன்னை நம்பேலாது. எங்களைச் சுத்திப்போடுவாய்"

"வடிவாய்க் கேட்டனான் எண்ணிறன்.திருப்பி ஒம்பதேழுக்காலுக்குப் போடேக்கை பாருங்கோவன்.நம்பாச் சாதியளப்பா....."


ரி.வி.யில் செய்தி முடிந்து கிறிமினல் படம் ஆரம்பித்தது. கொலைகாரனின் கால்களை மட்டும் காட்டினார்கள்.

முத்து ,ஞானம் ,பாலகுமார், அடுத்த றூம் பெடியள் எல்லோரும் இருந்து அப்போதுதான் பார்த்த செய்தியைப் பற்றிக் கலந்து உரை ஆடிக்கொண்டிருந்தார்கள்.அடுத்த றூம் பெடியள் 88 க்குப் பிறகு வந்த புதுசுகள். கலங்கிப் போயிருந்தார்கள்.

"ஒரு மாதிரி எங்களுக்குத் தத்து முடிஞ்சுது .தப்பியிட்டம்" பாலகுமார்.

"பாத்தியே புத்தியைக் காட்டியிட்டாய் .எல்லாருக்கும் ரண்டு கிழமை விசா தரேக்கை பேயடிச்ச மாதிரித் திரிஞ்சதை மறந்து போனியே.."என்றான் ஞானம்.

" எல்லாரும் உப்பிடித்தான். தன்ரை தன்ரை பாட்டைப் பாத்துக்கொண்டு போறாங்கள்."முத்து



பார்த்திபன்



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொல்ல, "உனக்கு ஸ்ரட் விசா கொழுப்பிலை கதைக்கிறாய்..." என்றான் பாலகுமார்.

"அண்ணோய்... அப்ப உண்மையாய் எங்களை அனுப்பத்தான் போறாங்களோ..?" பரிதவிப்போடு கேட்டான் சதீஷ் அடுத்த றூம்.

"ஒம் போல கிடக்கு" சாதாரணமகச்சொன்னான் பாலகுமார்.

"ஜேமன் கவுண்மேன்ற்றும் அந்தமாதிரித்தான் முடிவெடுக்குது! பொங்கல் வெடியோட வந்தெல்லாரும் இருக்கலாமாம். உக்கிரமான சண்டையிலை பாதிக்கபட்டு வந்தாக்கள் போகவேணுமாம். இதுக்கு எங்கை போய்முட்டலாம்?"- முத்து.

"ஆகத்தான் எங்களைக் கொச்சைப்படுத்துறாய். நாங்கள் வரேக்கையே ஆமிக்காறங்கள் றக்கிலை ஒடித்திரியத் தொடங்கியிட்டாங்கள்.." பாலகுமார்.

"அதுக்கு முந்தி மாட்டுவண்டில்லையே ஓடினவங்கள் ?நான் சொன்னது என்னெண்டா நாங்கள் வரேக்கை இருந்ததைவிட இப்ப நிலைமை படுமோசமெண்டதைத்தான். உனக்கு என்ன நடந்து இஞ்ச வந்தனினீ...?"

"உப்பிடியே நேரபோய் இனஸ்மினிஸ்ரரிட்டச் சொல்லிப்போட்டு வாவன்"

"அண்ணோய்... அப்ப உண்மையாய்த்தான் எங்களை அனுப்பப் போறாங்களோ..?" சதீஷ் மீண்டும் ஒருமுறை குறுக்கிட்டான்.

"உவனுக்கு இனி சுவரிலை நோட்டீஸ் ஒட்டவேணும். ஒமடாப்பா. இப்பதானே செய்தியிலை போட்டுக் காட்டினவங்கள். புது முடிவாம். பிறெஷ்ஷா எடுத்திருக்கிறாங்கள். ஐமிச்சமெண்டால் ஒம் பதேமுக்காலுக்குப் பாரன்" என்றான் பாலகுமார்.

"அவனை வெருட்டாதையடா. ஒருத்தரையும் இஞ்சயிருந்து அனுப்பயிடுறயில்லை. ஏதாவது செய்யிறதுதான்"என்றான் முத்து.

"பூக்கொண்டே குடுக்கலாம். வேற என்னத்தைச் செய்யிறது?"

"ஊர்வலம்..உண்ணாவிரதம்.. றாத்தவுசுக்கை பூந்திருக்கிறது.."

"ஆர் வரப்போறாங்கள்?புது முடிவு வாறதுக்கு முந்தியே எல்லரையும் அனுப்பிறதெண்டிருக்கேக்கையே ஏதாவது செய்யலாமெண்டு கேட்டா சனம் ஒடியொளிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குது.காட்காறர் தாங்கள் ஜேமன் சிற்றிசன் எண்டமாதிரி. இமிக்கிறன்ற்காறர் அவைக்கு அடுத்த தாய்.ஸ்ரட் விசாக்காறர் அப்பிடியும்,இப்பிடியும்.இப்ப எண்பத்தெட்டுக்கு முந்தி வந்தவையை இப்போதைக்குத் திருப்பியனுப்பிறேல்லையெண்டா ஆர் வரப்போறாங்கள்?அவனவன் தன்ரை பிரச்சினை முடிஞ்சுதெண்டு கிடக்குறான்" ஞானம் நல்ல அனுபவத்தோடு சொன்னான்.

"இப்போதைக்கெல்லோ அனுப்பிறயில்லையெண்டு சொன்னவங்கள். முந்தி வந்தவைய எப்பவும் அனுப்பலாம்தானே?"

"இந்த விளக்கம் ஆருக்குத் தேவை! பிரச்சினை இதோடை முடிஞ்சாச் சரி.பிறகு பிரச்சனை வரேக்கை பாப்பம் எண்டுதான் கனபேர்.."

"அண்ணோய்.. எங்களை அனுப்பிறதெண்டு முடிவாய் தீர்மானிசிட்டாங்களே..?" மீண்டும் சதீஷ்.

"இன்னுமொருக்காக் கேட்டியெண்டா இப்பவே பிளைற்றிலை ஏத்தி அனுப்பிப்போடுவன்" என்றான் பாலகுமார் எரிச்சலுடன்.

" ஏன்ரா அவனிலை பாயிறாய்?உங்களுக்கெல்லாம் ஒரு நினைப்பு இஞ்சயே பேமனென்றாக் கிடந்திடலாமெண்டு. முன்னான் டி.டி.ஆரிலை சிற்றிசன் கிடைச்ச கானாக்காறர் இஞ்சயிருந்து உவங்களாலை சாகிறதை விட தங்கடை நாட்டை போய்ச் சாவமெண்டு வெளிக்கிட்டுப் போய்க் கொண்டிருக்கிறாங்கள். வியட்நாம்காறர் வீட்டைவிட்டு வெளியாலை போய்க் கனகாலமாம் .நாஸியள் அந்தமாதிரி அங்கை அட்டகாசம் .ஆக்களை றோட்டிலை வைச்சே கொல்லுறாங்கள் .வலுகெதியிலை இன்ரசிற்றியிலை இஞ்ச வந்து இறங்கப்போறாங்கள் .அப்ப தெரியும் உவைதரவளிக்கு" முத்து பாலகுமாரை எச்சரித்தான்.

பாலகுமார் அலட்சியமாக, "சும்மா வெருட்டாதை.."

"எங்களையும் ரெம்பறறியாய்த்தான் தங்கவிடுறதெண்டால் கெதியிலை அலுவல் பாக்கப்போறாங்கள்போலதான் கிடக்குது" என்றான் சந்தேகத்துடன் ஞானம்.

"அனுப்புறதெண்டே முடிவெடுத்துப் போட்டாங்கள்.இப்பசும்மா பேய்க்காட்டுக்கு மாதக் கணக்குதான்"

"அண்ணோய் அப்ப திருப்பிய

www.tamilarangam.net

ஹுப்புற முடிவிலை மாற்றம் வராதே..?" கேட்டுவிட்டு சதீஷ் பாலகுமாரைப் பார்த்துப் பயந்தான்.

"அடுத்த கிழமை உவன் ஞானாவுக்கு லோயரிட்டை ரமீன். அப்ப ஒண்டடியாய் எல்லாத்தைப் பற்றியும் கேப்பம்"

"இப்ப தேத்தண்ணி உடாய்க்குது" என்றான் பாலகுமார்.

"போய்ப் போட்டுக்குடி" என்றான் ஞானம்.

"சதீஷ்.. சின்னக் கையாலை ஒரு ரீ போட்டுக்கொண்டுவாடா" குழைந்தான் பாலகுமார்.

"உன்ரை அலுவலுக்கு மட்டும் அவன்ரை காலைப் பிடி.நீ போட்டுக் குடாதை. ஐயா எழும்பிப் போய்ப் போகட்டும்" முத்து.

"துரோகி,கைக்கூலி..."என்றபடி பாலகுமார் எழுந்து குசினிக்குள் போனான். "போடேக்கை எங்களுக்கும் சேத்துப்போடு. பால் கனணக்விடாதை" என்றான் ஞானம்.

வானம் கரி பூசவாரம்பித்தது. மழைத் துளிகள் ஆங்காங்கே முன்னறிவித்தலாய் விழுந்தன. ஜேர்மனியில் உத்தியோகபூர்வ கோடை காலத்தில் பாதையில் போனவர்கள் குடையும் பிடித்து ஜக்கற்றும் போட்டிருந்தார்கள்!

முத்துவுக்கும் ,ஞானத்திற்கும் சதீஷையும் அவன் நண்பர்களையும் பார்க்கப் பாவமாயிருந்தது. சதீஷ் ஈ.பி.யின் மக்கள் தொண்டர் படைக்கு பலாத்காரமாகக் கொண்டுசெல்லப்பட்டு, மொட்டையடிக்கப்பட்டு ,ஈ.பி.தலைவர்கள் நடுத்தெருவில் விட்டுப்போனபின் புலியின் கொலைவெறியிலிருந்து தப்பி வந்தவன் .பிளைற்றுக்குள் ஏறியபின்தான் உயிர் வந்ததென்று சொல்லியிருந்தான்.

அவனுக்கு ஆறு மாதங்கள் பிறகு வந்த அருணன் ஏதோ ஓர் இயக்கத்தால் சித்திரவதைக்குள்ளாகித் தப்பிவந்திருந்தான்.புலியால்தான் என்றுகதைத்துக்கொண்டார்கள்.பயம் இன்னும் போகவில்லை.தனக்கு என்ன நடந்தது என்று யாருக்கும் இன்னும் சொல்லவில்லை. இரவில் நித்திரையில் சிலவேளைகளில் ஐயோ அம்மா.. என்னை விடுங்கோ என்று கத்துவான்,

அடுத்தவன் ஜெயந்தன் புலியிலிருந்து வந்தவனாம்.கதையள் கரடு,முரடாய்த்தானிருக்கும்.அவனுடன் அதிகம் பலர் பழகுவதில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"ஒண்டுக்கும் யோசியாதைங் கோடா. எப்பிடியாவது வெல்லு வம்" முத்து அவர்களைத் தைரிய ப்படுத்த முயற்சித்தான்.

"அப்பிடி அனுப்பத்தான் போ றாங்கனெண்டால் என்ரை சா இங்கதான்"என்றான் இவ்வளவு நேரமும் பேசாமலிருந்த அரு ணன்.

" அப்பிடித் தற்கொலைப் பிளான் ஏதேனும் இருந்தால் என்ரை சாவைப்பாத்தாவது மற் றவைக்கு பலப்பான விசா குடு ங்கோ எண்டு மினிஸ்ரருக்குக் கடிதம் எழுதிவைச்சிட்டுச் செய் யடாப்பா" பாலகுமார் எல்லோரு க்கும் ரீ கொண்டுவந்து கொடுத் தான்.

"பாலா.. பகிடிக்கு ஒரு அளவு வேணும் .அவங்கள் பேய் விசரி லையிருக்கிறாங்கள்.." ஞானம் ஏசினான்.

"பிரச்சினைதான்.அதுக்குமண் டையைப் போடுறதே. எனக்கு உந்தச் சீரியஸ்கள் சரிவராது. தலையைத் தொங்கப்போட்டாப் போலை எல்லாம் சரிவந்திடுமே"

"நீயும் உன்ரை கொள்கையும்"

எல்லோரும் ரீ குடித்தார்கள்.

கிறிமினல் படத்தில் சுபத்திற்கு சற்று முன் கொலைகாரன் பிடிப ட்டான் .துப்பறிவாளர் கடைமை யை முடித்துக்கொண்டு தனக்கு உதவி செய்த பெண்ணின் சொண் டைத் தன் வாயால் கவ்வினான்.

முத்துவுக்குத் திடீரென உதய னுடன் கதைத்தது ஞாபகம் வந் தது.

"சங்கம்,ஒன்றியம்,ஸ்போட்ஸ் கிளப்.... ஒண்டுமேயில்லையெண் டால் ஒரு பிரச்சினைக்கு எப்பிடி சேந்து வேலை செய்வியள்...?"

உதயனின் கேள்வியில் நியா யமிருப்பதுபோல் பட்டது.அகதிய ளைத் திருப்பியனுப்ப வேண்டா மெண்டு ஊர்வலம் வைக்கிறதெ ண்டாக்கூடி ஆர் ஒகனைஸ் பண் ணிறது .பூனைக்கு மணி கட்டுற பிரச்சினை .இந்த நேரத்திலா வது இதுக்கொண்டு செய்யாட்டி "சங்கம் ஒண்டு ஒகனைஸ் பண் ணுவமே..?"

அங்கிருந்த எல்லோரும் முத் துவை அதிசயமாகப் பார்த்தார் கள்."நான் நீ குடுக்கேக்கை கூடி நல்லாய்த்தானிருந்தவன்" என் றான் பாலகுமார்.

"டேய் நான் சீரியஸாய்க் கதைக்கிறன்"என்றான் முத்து.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நாங்களும் அப்பிடித்தான்"

சதீஷும்,அருணனும் எழுந்து போனார்கள்."சமைக்கப் போறம் அண்ணை"

"கறியிலை எனக்கும் கொஞ்சம்" விண்ணப்பித்தான் பாலகுமார்.

அடுத்தடுத்த நாட்களிலும் சங்கம் பற்றி முத்து கதைத்துப்பார்த்தான்.யாரும் அசைவதாகத் தெரியவில்லை.

பாலகுமாருக்குத் திடுக்கிடும் செய்தியுடன் இலங்கையிலிருந்து கடிதம் வந்தது.

(இன்னும் வரும்)

---

"கியூபா; இன்னும் எத்தனை காலம்..?" தொடர் இடமின்மையால் அடுத்த கலம் கொண்டு வரும்.

---

கலம் 41 இனதும், இக் கலத்தினதும் அட்டைப்படம் வரைந்தவர் ஜீவன்.

---



## நூல் அறிமுகம்




Sakthi
P. Boks. 99
Oppsal
0619 Oslo 6
Norway



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(கலம் 42 இன் தொடர்ச்சி ....)

தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஸ்ரீ.ல.சு.கட்சியே சிங்களப் பேரினவாதத்தின் கட்சி என்ற அபிப்பிராயத்தைப் பேணுவதில் தமிழ்த் தேசியவாதத் தலைமை நீண்டகாலமாக வெற்றி கண்டுள்ளது. பண்டாரநாயக-செல்வநாயகம் ஒப்பந்தத்திற்கெதிரான கண்டி யாத்திரை 1960 ஜூன் தேர்தலின்போது யூ.என்.பி.யின் இனவாதத் தேர்தல் பிரசாரம் போன்றவற்றை முடி மறைத்தே தமிழரின் பாராளுமன்ற தேசிய வாதத் தலைவர்கள் யூ.என்.பி.யுடன் தமது ஒத்துழைப்பை 1964 முதல் விருத்தி செய்தனர் என்பதைக் கவனிக்கும் போது தமிழ்ப் பிரதேச அரசியலில் யூ.என்.பி.க்கும் ஸ்ரீ.ல.சு.கட்சிக்கும் இடையில் இருந்த பாரிய வேறுபாடுகள் அசட்டை செய்யப்பட்டதில் வியப்பில்லை. 1956 முதல் 1964வரை நெற்காணிச் சட்டம், பிரித்தானியரது கடற்படை, விமானப்படைத் தளங்களை அகற்றல், எண்ணெய்க் கம்பனிகளின் தேசியமயமாக்கல், அரச உதவி பெறும் பாடசாலைகளை அரசு பொறுப்பெற்றல் போன்ற பிரச்சனைகளில் தமிழ்த் தேசியவாதத் தலைமை யூ.என்.பி.யுடனேயே சார்ந்து நின்றது. இலங்கையின் அணிசேராக் கொள்கைகளிலும் அயற்கொள்கைகளிலும் யூ.என்.பி.யையொத்த அல்லது அதனிலும் பிற்போக்கான நிலைப்பாட்டையே மேற்கொண்ட தமிழ்த் தேசியவாதத் தலைமை தமிழ்ப் பிரதேசங்களில் தேசிய அரசியல், பொருளாதாரம் போன்ற விஷயங்களில் குறைந்த அழுத்தஞ் செலுத்தி மொழிப்பிரச்சனையை மட்டுமே முதன்மைப் படுத்துவதில் வெற்றிகண்டது. இதன் மூலம் வடக்கில் இடதுசாரிகளின் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை அவர்களால் மழுங்கடிக்க முடிந்தது.

இன்றுங்கூட இலங்கையின் இடதுசாரிக் கட்சிகளைச் சிங்களத் தேசியவாதக் கட்சிகளுடன் சேர்த்தே கருதும் போக்கு வடக்கிலும் கிழக்கிலும் காணப்படுகிறது. இது மட்டுமன்றிப் பாராளுமன்ற அரசியலில் இடதுசாரிக் கட்சிகள் எவ்வாறு செயற்படுவது என்பதுபற்றி இடதுசாரி இயக்கத்தினுள் நடந்த விவாதத்தையும் அதன் விளைவான பிளவுகளையும் புறக்கணித்துப் பாராளுமன்றவாத இடதுசாரிகளின் தவறுகளை முழு இடதுசாரிகளின் தலையிலும் சுமத்தும் வழக்கமும் இன்னும் தொடர்கிறது. இந்த விஷயங்களில் நமக்கு தெளிவு அவசியம்.

பாராளுமன்ற இடதுசாரிகள் எவ்வளவுதூரம் பேரினவாதத்துக்குத் துணைபோனார்கள்,

---

# போராட்ட ஐக்கியம்.

www.tamilarangam.net

எவ்வளவு தூரத்துக்கு இனவாத்தை வளர்த்தார்கள் என்பனபற்றித் தமிழ்த் தேசியவாதிகள் செய்யும் பிரச்சாரத்துக்கும் உண்மைக்கும் இடையில் உள்ள தூரம் பெரிது. ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் இடதுசாரிகள் ஒத்துழைத்தது தவறு என்போரிற் பலர் தமிழ்த் தேசியவாதத்தின் பார்வையில் இப் பிரச்சனையை அணுகுவோராவர். மார்க்ஸிய-லெனினிஸ சக்திகள் பாராளுமன்ற இடதுசாரிகளை விமர்சிப்பதற்கும் தமிழ்த் தேசியவாதிகள் விமர்சிப்பதற்கும் உரிய அடிப்படைகள் வேறுபட்டவை.

1950-70 காலத்தில் ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் ஒத்துழைப்பது அவசியம் என்ற விஷயத்தில் பல வரட்டு மாக்ஸியவாதிகள்கூட முரண்படவில்லை. இன்றுவரை, யூ.என்.பி.க்கு எதிரான முக்கிய பாராளுமன்ற அரசியற் கட்சியாக உள்ள ஸ்ரீ.ல.சு.க. யூ.என்.பி.யைப் போலன்றி ஏகாதிபத்திய விரோதமானது. தேசிய அடிப்படையிலான பொருளாதார விருத்தியை ஆதரிப்பதிலும் சமூக சீர்திருத்தங்களைச் செய்வதிலும் யூ.என்.பி.யைவிட ஸ்ரீ.ல.சு.கட்சியே முன்னின்றுள்ளது என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. அதே சமயம், தேசிய முதலாளி வர்க்கத்தின் ஊசலாடும் தன்மையும் அதன் போக்கில் ஒரு நம்பகமற்ற தன்மையைப் புகுத்துகிறது. 1977க்குப் பின், முக்கியமாக யூ.என்.பியின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளையும், பழிவாங்கல்களையும் அடுத்து, ஸ்ரீ.ல.சு.கட்சியும் யூ.என்.பி அரசுக்குச் சங்கடங்களை உருவாக்கும் நோக்கில் மிகத் தவறான நிலைப்பாடுகளை மேற்கொண்டது உண்மை. இவற்றைத் தமிழ்த் தேசிய வாதத் தலைமையின் நடத்தையினதும் இலங்கையின் அண்மைக்கால வரலாற்றின் பின்னணியிலும் ஆராய்வதே பொருந்தும். எவ்வாறாயினும் ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் பாட்டாளிவர்க்கக் கட்சிகளது ஒத்துழைப்பு நிபந்தனையற்றதும் ஸ்ரீ.ல.சு.கட்சியின் தலைமையின் கீழானதுமாக அமைந்திருக்க நியாயமில்லை. இவ்விடத்திற்றான் பாராளுமன்ற இடதுசாரித் தலைமைகளின் நடைமுறை தவறிழைத்தது.

பாராளுமன்ற அரசியலைத் தந்திரோபாயமாகப் பயன்படுத்துவது என்ற நிலைப்பாட்டினின்று வழுவிய இடதுசாரிகள் பாராளுமன்ற அரசியலின்மீதே தங்கியிருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டதன் விளைவாகவே தேர்தல் தொகுதி உடன்பாடுகள் என்ற நிலையிலிருந்த ஒத்துழைப்பு கூட்டரசாங்கம் என்ற நிலைக்கு விருத்தியடைந்தது. பாராளுமன்ற அரசியலூடு 'சோஷலிஸ' மாற்றங்களைப் புகுத்தலாம் என்ற பிரமையை வெகுஜனங்களுக்கு வழங்கிய தவற்றின் விளைவுகளைப் பாராளுமன்ற இடதுசாரிகள் அனுபவிக்கச் சில ஆண்டுகளே தேவைப்பட்டன. ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற் பங்குபற்றியதன் மூலம் ஸ்ரீ.ல.சு.கட்சியின் தலைமைக்குத் தங்களை உட்படுத்திய பாராளுமன்ற இடதுசாரிகள் தங்கள் அரசியல் சுயாதீனத்தை ஊறுபடுத்தியது மட்டுமன்றி அரசின் தவறுகளிலும் தவிர்க்கமுடியாத பங்காளிகளாயினர். யூ.என்.பி.க்கு எதிரான போர்ாட்டத்தையும் ஏகாதிபத்திய எதிர்ப்பையும் வலுப்படுத்த ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் சேர்ந்து அரசாங்கம் அமைத்திருக்க அவசியமில்லை என்பதே மாக்ஸி-லெனினிஸ சக்திகளது நிலைப்பாடாகும். அரசாங்கத்திற் பங்குபற்றாமலே அத்தகைய ஆதரவை வழங்கியிருப்பின் பாட்டாளி வர்க்கத் தலைமையின் சுயாதீனத்தைப் பேணவும் தொழிற் சங்கங்கள் போன்ற வெகு ஜன ஸ்தாபனங்களில் இடதுசாரிக் கட்சிகளின் செல்வாக்கைப் பேணவும்

www.tamilarangam.net

இயலுமாயிருந்திருக்கும்.

ஸ்ரீ.ல.சு.கட்சியுடனான கூட்டணியின் மூலம்சோஷலிஸ இலக்குகளை நிறைவேற்றும் நோக்கம் பிரகடனம் செய்யப்பட்டது. சர்வதேச நிலவரங்களைக் கணிப்பில் எடுக்கும் போது தேசிய சுயநிர்ணயத்தை வலிமைப்படுத்தி ஏகாதிபத்தியத்தினதும் நவகொலனித்துவத்தினதும் பிடியினின்றும் நாட்டை விடுவிக்கும் பணியே உடனடியாக அவசியமானதும் சாத்தியமானதும் என்பது தெளிவாகும். இந்த நோக்கமும் ஜனநாயகத்தைப் பரவலாக்கும் இயக்கமும் முதன்மைப் படுத்தப்பட்டுச் சகல முற்போக்குச் சக்திகளையும் ஐக்கியப்படுத்துவதற்குப் பதிலாக பாராளுமன்ற அரசியலை அடிப்படையாகக் கொண்டே பிரச்சனைகள் அணுகப்பட்டன. இதன் விளைவாக இடதுசாரி இயக்கம் மேலும் பிளவுபடவும் பலவீனமடையவும் நேர்ந்தது. மாக்ஸிய-லெனினிஸ சக்திகளும் சமசமாஜக் கட்சியினின்றும் பிரிந்த கட்சிகளும் ஐக்கிய முன்னணி வைத்த விமர்சனங்களை பலவும் நியாயமானவையேயாயினும் இவர்களிற் சிலர் முக்கியமான சில பிரச்சனைகளின் போது

ஏகாதிபத்தியச் சார்புடைய யூ.என்.பி.யைப் பிரதான எதிரியாகக் கருதிச் செயற்படும் தேவையை அலட்சியம் செய்தனர். மாக்ஸிஸ-லெனினஸ வாதிகளின் தலைமையின் சில தவறுகள் அவர்களைப் பலவீனப் படுத்தியதோடு வெகுஜனங்களிடமிருந்து அவர்களைத் தனிமைப் படுத்தின. இச்சூழலிலேயே ஜே.வி.பி. வேகமாக விருத்தி பெற்றது. ஜே.வி.பி.யின் நோக்கங்கள் என்னவாயினும் அவர்களது கிளர்ச்சி முற்போக்குச் சக்திகளைப் பலப்படுத்தத் தவறியதோடு மறைமுகமாக யூ.என்.பி.யின் எழுச்சிக்கே உதவி செய்தது.

இன்றுவரை யூ.என்.பி.க்கு எதிராக ஐக்கியப்படவேண்டிய சக்திகள் பலவகையிலும் பிளவுபட்டே இருந்து வருகின்றன. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. ஆயினும் ஐக்கியம், பாராளுமன்றத் தேர்தல் போன்ற தேவைகளையொட்டி அமையும்வரை, சந்தர்ப்பவாதக் கூட்டணிகளே சாத்தியமாக முடியும். 1977க்குப் பின், முக்கியமாக 1983 இனக்கலவரத்தையும் அதன்பின்னான அரச பயங்கரவாத ஒடுக்குமுறைக்குப் பின் யூ.என்.பி.க்கு எதிரான சக்திகளின் ஐக்கியமின்மையே யூ.என்.பி. அடக்குமுறை அரசின் மூலபலமாக உள்ளது. இன்று நம் முன்னுள்ள பணி மக்களது அடிப்படை உரிமைகள் தொடர்பானது. இந்த அடிப்படையின் மீது ஒரு குறுகியகால வேலைத்திட்டத்தையும் அதனைச் சாதிக்கவல்ல ஒரு ஐக்கிய முன்னணியையும் கட்டியெழுப்பும் தேவை நம் முன்னுள்ளது.


யூ.என்.பி. அரசு நமது முக்கிய எதிரியா என்ற கேள்விக்குச் சாதகமான பதிலைத் தருவோர் யூ.என்.பி.யுடன் முரண்படக்கூடிய சகல சக்திகளையும் எவ்வாறு ஐக்கியப் படுத்துவது என்ற கேள்விக்குப் பதில் தேடவேண்டும். இந்த ஐக்கியத்தின் நோக்கம் மக்களது அடிப்படை உரிமைகளான ஜனநாயக மனித உரிமைகளையும் அரசின்மீது சட்டத்தின் ஆளுமையையும் மீண்டும் நிலைநிறுத்துவதாக இருக்கமுடியுமே யொழிய இன்னொரு அரசியற் கட்சியையோ தலைமையையோ அதிகாரத்தில் அமர்த்துவதாக இருக்க முடியாது. ஜே.வி.பி.யும் முக்கிய தமிழர் விடுதலை இயக்கங்களும் மனித உரிமைகளையும் ஜனநாயக உரிமைகளையும் மறுக்கும் முறையில் செயற் பட்டுள்ளனர் என்பது உண்மை. இவற்றைக் கண்டிக்கவும் தவறுகளை நிவர்த்திக்கவும் எவருந்

www.tamilarangam.net

தயங்கக்கூடாது. அதே சமயம், இத் தவறுகளையே காரணமாகக் கொண்டு யூ.என்.பி.க்கு எதிராகப் போராடக்கூடிய சக்திகளைப் பூரணமாக ஒதுக்கவும் முடியாது. அடக்குமுறை அரசிற் கெதிரான போராட்டம் ஜனநாயக மனித உரிமை இலட்சியங்களையும் சகல தேசிய இனங்களதும் சுய நிா்ணயத்தையும் வலியுறுத்துவதன்மூலமே தன்னைப் பயன்படுத்திக் கொள்ள இயலும். போராட்ட நடைமுறைமூலம் விருத்தியாகும் ஐக்கியத்தின் மூலமே குறிப்பிட்ட இயக்கத் தலைமைகளின் தவறுகளும் அத்துமீறல்களும் திருத்தப்படமுடியும்.

யாருடன் ஐக்கியப்படுவது என்ற கேள்வியிற் தொடங்குவதைவிட நமது சமுதாயத்தின் பிரதான முரண்பாடென்ன, அது தன்னை எவ்வாறு வெளிப்படுத்திக் கொள்கிறது என்ற கேள்விக்குப் பதில் தேடுவது யாருடன் எதற்கான எவ்வாறான ஐக்கியம் என்ற கேள்விக்கு நல்ல பதில்களைத்தரும். இந்த முனைப்புடன் 'தூண்டிலில்' தொடங்கிய விவாதத்தைத் தொடருவோமாயின் திசையிழந்துபோன தமிழர் விடுதலைப் போராட்டத்தையும் இலங்கையிற் பலவீனமான நிலையில் உள்ள ஜனநாயக, மனித உரிமைகட்கான போராட்டத்தையும் இணைத்து ஒரு புதிய புரட்சிகர சக்தியை உருவாக்குவதற்குப் பங்களிக்க முடியும் என்பது என் கணிப்பு.

-சிவசேகரம்-




**பின்னட்டை அறிவித்தல்**

**புலிகளினால் கடத்தப்பட்ட விஜி தரனை விடுவிக்ககோரி நடாத்த பட்ட உண்ணாவிரதத்தில் பங்கு பற்றிய விமலேஸ்வரன் ஆற்றிய உரையிலிருந்து.**

www.tamilarangam.net

# புலிகள் - மே தினம் - ஊர்வலம்

காலை 9.30 மணிக்கு மருதனார் மடத்தில் இருந்து ஊர்வலம் ஆரம்பித்தது. இவ்வூர்வலம் குறித்த ஒரு புள்ளியை கடந்து முடிய சுமார் 5 மணித்தியாலங்கள் ஆனது. கிட்டத்தட்ட 2 இலட்சம் மக்கள் கலந்துகொண்டதாக பத்திரிகைக் குறிப்பு தெரிவிக்கின்றது. மனிதர்களும், அலங்கார ஊர்திகளும் இடை இடை அணியை ஒழுங்கு செய்யும் புலிகளும் ஆக வீதியை நிறைத்து நகர்ந்தது ஊர்வலம்.

ஒரு அமைப்பு அல்லது இயக்கம் மக்களின் பிரதிநிதியாகக் கொள்ளப்படுவதற்கு ஊர்வலமொன்று சரியான அளவுகோலாகக் கருதப்படுமேயானால் நடாத்தப்பட்ட ஊர்வலத்தின்படி புலிகளே மக்களின் பிரதிநிதிகள்.......!

இவ்வூர்வலத்திற்கான அணி திரட்டல் எவ்வாறு நிகழ்ந்தது..? இதன் பின்னிருந்த மக்களின் முணுமுணுப்புகள் என்ன..? என்பவற்றைப் பின்னர் கூறுகின்றேன். இப்போது ஊர்வலத்தின் காட்சிகளுக்கு வருவோம்.

புலிகளின் ராணுவ அணிவகுப்புத் தொடங்கி பாண்ட் வாத்தியக் கோஷ்டி உட்பட பறைமேளஇசை அணிவரை சகலவற்றையும் கொண்டிருந்தது ஊர்வலம்.

ஊர்வலத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள் கையில் சிவப்பு, மஞ்சள் கொடி காற்றில் படபடத்துக்கொண்டிருந்தது. பெண்களில் அநேகர் சிவப்புச்சேலையும், மஞ்சள் சட்டைகளும் அணிந்திருந்தனர். தலைகளில் சிவப்பு, மஞ்சள் தொப்பி அல்லது உள்ளூர் தயாரிப்பான பனையோலைத் தொப்பி காணப்பட்டது. ஆண்களில் 90% மும் வேட்டியும், 'சேட்டும்' அணிந்திருந்தனர். முகங்களில் பெருமிதமும், போர்முனைக்குச் செல்லும் ஆவேசமும் மிக்கவர்களாகி வீதி

www.tamilarangam.net

யோரங்களில் பார்வையாளர்களாக இருந்தவர்களை பங்காளர் ஆகும்படி இடை இடை கோசங்களும் இட்டனர்ஊர்வல மாந்தர்.

'தானைத் தலைவன் தம்பி பிரபா' என்பதாகவும்,ஒடுக்கப்பட்டதேசங்களே ஒன்றுசேருங்கள் என்பதாகவும், உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள் (முஸ்லிம் தொழிலாளர்கள் தவிர்த்து என்பது சொல்லாமலே விளங்கும்!)என்பதாகவும் கோஷங்களுடனும், கோஷ அட்டைகளுடனும் அசைந்து சென்றது ஊர்வலம்.

கோஷ அட்டை ஒன்றில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:

" ஒழியட்டும் ஒழியட்டும்
ஆண் மேலாதிக்கம் "

தமிழ்.தமிழ் எனக் கூப்பாடு போடுபவர்கள் இந்தச் சிறு தவறை எவ்வாறு 'கண்டுக்காமல்' விட்டார்களோ..?!வியாபார ஸ்தலங்களின் பெயர்கள் தூயதமிழில் எழுதப்படவேண்டும் என்பதாகக் கட்டளை இடப்பட்டது யாவருக்கும் தெரிந்ததே. கடைகளுக்குப் பெயர் மாற்றம் செய்வதில் பெரிய தலையிடிகளை எதிர்கொள்வதாக தமிழ்ப் பண்டிதர்களும்,மொழிபெயர்ப்பாளர்களும் குறைப்பட்டுக்கொள்கிறார்கள் (பனடோலும் இப்போ தட்டுப்பாடு!).

இதன்படி சாப்பாட்டுக் கடையொன்றின் பெயர் "உணவு இன்சுவை அகம்".இவ்வாறு உள்ளது மொழிப்பற்றும்,மொழிவெறியும். சிங்கள அரசிடம் உள்ள மொழி வெறியிலும் இது எந்தளவிற்குக் குறைந்தது?

கலைஞர் ஒருவர் சொன்னாராம் நாங்கள் ஒடுக்கப்படுபவர்களென்றவகையில் அதாவது அந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற வகையில் எங்களிடம் மொழி, இனவெறிகள் இருப்பதை சற்றே நியாயப்படுத்தலாம், அது பிழையானதும் அல்லவென்று.

அவரிடம் நான் கேட்கவேண்டியதொன்று உள்ளது. இனவாதமே பிழையானது. இதற்குள் என்ன தமிழும்,சிங்களமும். உண்மையில் அவரதுசிந்தனை இனவுணர்வுகளில் இருந்து விடுபடவில்லை .அவரது மட்டுமல்ல, இன்னும் ஆயிரமாயிரம் மனிதர்களினதும் கூடவே.

ஊர்வலத்தில் பிரதானமாக மரபு முறையிலான உற்பத்தி முறைகளுக்கு திரும்பிச் செல்வதையே குறியீடு செய்யும் உற்பத்திச் சாதனங்கள் காட்சியாக்கப்பட்டிருந்தன. துலாவும் பட்டையும்,

www.tamilarangam.net

உரலும் உலக்கையும், வத்தையும் துடுப்பும்,வண்டிலும் மாடும் ஊர் வலத்தின் அங்கங்கள்.


ஊர்வலம் நெடுகிலும் சாரத்தைக் களைந்து கோவணத்தை இறுகக் கட்டிய மீனவர்களைப் பார்த்துப் பலர் கிளுகிளுத்துச் சிரித்ததைக் கண்டேன்.

பனைவளத்தின் பயன்பாடுகளை ஓரளவிற்கு ஊர்வலத்தில் காணக்கூடியதாகவிருந்தது. மரபான உற்பத்தி முறைமைகளுக்கும் ,உற்பத்தி உறவுகளுக்கும் திரும்பிச் செல்லும்படி வேண்டுகோள் விடுக்கப்படுகிற அதே நேரம் நிலவுகின்ற அரை நிலப் பிரபுத்துவ மற்றும் காலனித்துவ சமூக அமைப்புடன் முரண்படும்படியான கோஷங்களுடன், சில தேசிய முதலாளித்துவ சிந்தனைகளையும் பிரதிபலிக்கிறார்கள். சாதி வேறுபாடுகள்,சீதனக்கொடுமை,சமய வேறுபாடுகள் ஒழிதலுடன் ஆண்,பெண் சமத்துவம், சமதர்ம சமூகம் என்றெல்லாம் பேசப்படுகிறது...!

உற்பத்தி உறவுகளுடன் சம்பந்தப்பட்ட இந்த விடயங்களில் இவர்கள் கொண்டுள்ள முரண்பாட்டுக்கான விளக்கத்தை எவ்வாறு தரப்போகிறார்கள்? புலிகளுக்கு பஜீரோ ஜீப்பும், மக்களுக்கு மாட்டு வண்டிலும் என்பதாகவா..?!

தமது போராட்டத்தைச் சர்வதேசமும் அங்கீகரிக்கவேண்டும் என்பவர்கள் போராட்டம் என்பது சர்வதேசக் கண்ணோட்டத்திலிருந்து அணுகப்பட வேண்டும் என்பதை மறந்துவிட்டிருக்கிறார்கள்.முன்னர் எங்கள் நண்பர்ஒருவருடன் உரையாடும்போது "இதைத்தான் தம்பி பனங்கொட்டைத் தேசியவாதம் என்பது " என்றார்.

நிலப்பிரபுத்துவ உறவுமுறைகளும்,தேசிய முதலாளித்துவ நலன்களும்,சமதர்ம சமூக அமைப்பும் என ஒரு முக்கோணத் தொடர்புமுறைகொண்ட புதிய தத்துவத்தின் அடிப்படையில் புலிகள் இயங்குகிறார்களோ என ஐயுறவேண்டியுள்ளது.ஒருவேளை காலத்திற்கும்,நேரத்திற்கும் ஏற்ப ஆட்சேர்ப்புக்காக ஈழமெனும் முடிய சுடலையில் நிகழ்கிற மீன்தாக்கமோ என்னவோ...




தமிழ் தேசிய இனத்தின் சுய

www.tamilarangam.net

நிர்ணய உரிமையை அங்கீகரி என்கிறார்கள். முஸ்லிம்கள் ஒரு இனமல்ல,இலங்கை அரசு அவர்களுக்குப் போட்ட எலும்புத்துண்டைவிட பெரியதுண்டை நாங்கள் கொடுத்தோம்.அடங்கவில்லையென்பதால் துரத்தினோமென்கிறார்கள்.இனங்களுக்கான சுயநிர்ணய உரிமையை பூரணமாக உறுதிசெய்யும் ஒரு சமூக அமைப்புக்கும் இவர்கள் சொல்லும் 'சமதர்ம'த்திற்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா..?

ஊர்வலத்தில் மிக வேதனையைத் தந்த ஒரு காட்சி... குல்லாய் அணிந்து குறுந்தாடியுடன் கையில் கோடாலி ஏந்திய முஸ்லிம் இளைஞனை உருவகப்படுத்தி இருந்ததுதான்.என்றென்றைக்குமாக முஸ்லீம்களை எதிரிகளாகக் காட்டும் இனவாத விதை முளைத்துவிட்டது மட்டுமல்ல மரமாகத் தொடங்கியுள்ளது. உரம் போட,இரத்தம் விடப் புலிகள்...

வெளிநாடு செல்பவர்களைக் கேலிசெய்யும் வகையிலும் காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தன.ஸன்கிளாசும், உதட்டுச் சாயமும், தொங்கும் கைப்பையுமாக சிறுமி ஒருத்தி ஆங்கிலம் பேசிச் சென்றாள் வீதி வழி.

இளம் சிறுவர்கள் ஆயுதங்களைத் தாங்கிச் சென்றனர்.அவர்கள் அதைத் தாங்கிச் சென்ற காட்சி..."நாளைய ரம்போக்கள்" என் பின்னிருந்து சிறுமி(6வயது மதிக்கத் தக்கவள்)ஒருத்தி "புலி மாமா","புலி அக்கா" என்பதாக ஆரவாரித்துக் கொண்டிருந்தாள். இளம் செல்வங்களின் துடிப்பு நிறைந்த கண்களில் இருக்கவேண்டிய ஆரோக்கியமும்,கற்பனையும் ,படைப்பார்வமும் அழிந்து போய் இவர்களின் கண்களில் ஆயுதமோகம் என்றென்றைக்குமாகவா..?

அரசின் அனைத்து இராணுவ ஒடுக்குமுறைகளும்,மாற்று அடிவருடிகளினது ஒடுக்குமுறைகளும் அப்படியே அதே வக்கிரங்களுடன் காட்சியாக்கப்பட்டிருந்தன.

வாகனங்களில் கட்டி இழுத்து செல்வது,ரயர் போட்டு எரிப்பது, கட்டித் தொங்கவிட்டு அடிப்பது, தொடக்கம் பாலியல் வன்முறை வரையும் சகலதும் ஒவியமாகவும்,காட்சியமைப்புகளாகவும் செய்யப்பட்டிருந்தன.ஒவியங்கள் எதுவும் குறிப்பிடும்படியாக இருக்கவில்லை.

துலா மிதித்தபடி வயோதிபர் ஒருவர் தனது இளமைக் கால அனுபவங்களை அதாவது அக் கால அரசியல் தலைவர்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துரோகத்தனங்களை ஒலிபரப்பி யபடியிருந்தார்.

தேனிசை செல்லப்பாவின் 'இசை கானங்களும்',புதுவையின் பாடல்களும் ,நாட்டார் இசையில் அமைந்த உள்ளூர் கவிஞர்களின் பாடல்களும் காங்கேசன்துறை வீதி வழி வீசிச்சென்ற காற்றின் அணு க்களிலே தேசவிடுதலையை யும்(?),இனவாதத்தையும் கூடவே தலைமைத்துவ விசுவாசத்தையும் விசிறிச் சென்றன.பருகியபடிக்கு நானைய மலர்கள்....

இலங்கை அரசின் இராணுவ த்துடன் சண்டை பிடிப்பவர்கள் என்ற ஒரே உறவுமுறையின் அடி த்தளத்தில் புலிகள் நிமிர்ந்துநிற் கிறார்கள்.மக்களை ராணுவமயப் படுத்துவதில் புலிகளின் பங்கை மட்டுமே தூக்கிப்பிடிப்பது அடிப் படையில் பிழையானது. தமிழ்மக் களை இராணுவ மற்றும் இதர ஒடுக்குமுறைக்கு உள்ளாக்குவதன் மூலம் தனது நலனைப் பேணிக் கொள்கின்ற அரசு,இந்த நிர்ப்ப ந்தத்திற்குள்ளாகவே தன்னைஒரு பலமான தேசிய இராணுவமாக



www.tamilarangam.net

வளர்க்க முயலும் புலிகள்,இவர்க ளிடையேயான முரண்பாட்டில் இலங்கையைச் சுரண்டவும்,தனது ஆயுதங்களை விற்கவும் செய்கி ன்ற ஏகாதிபத்தியங்கள் எனஒரு பரந்துபட்ட பார்வையில்தான் தமிழ் இளைஞர்கள் மீது திணிக் கப்படுகிற ஆயுதக் கலாச்சாரத் தைப் புரிந்துகொள்ள முடியும்.

ஆயினும் இவ்வாறான ஒரு பிரச்சினையின் ஒவ்வொரு அம்ச த்திலும் புதைந்துள்ள ஏகாதிபத் திய நலனை அம்பலப்படுத்தி, அதை எவ்வாறு எதிர்கொள்வது என்பதை மக்களுக்குப் புரியவை த்து அடிப்படையிலேயே ஏகாதிப த்தியத்திற்கெதிராக மக்களை அணிதிரட்டுவதைத்தான் ஒரு மக் கள் அமைப்பு செய்யும். இந்த அடிப்படையில் பார்க்கும்போது சமதர்ம சமூகத்தைக் கட்டி எழு ப்பப்போவதாக இன்று கோஷமி டுகின்ற புலிகள் இவ்வாறும் கோஷமிடுகிறார்கள்:

"ஆயுதம் எமது ஒரு அங்கம். ஈழத்தில் ஒவ்வொருவர் கையி லும் ஆயுதம்..."

முன்னுக்கு முன்னுத்தான் பதில் என்பது குறுகிய நோக்கில் சரி யேயானாலும் முட்களின் மீதான மானிட வாழ்வே என்றென்றை க்குமாக இருக்கும் என்ற சாரம் அவர்களின் கோஷத்தில் தொனி க்கிறது என்றால் புலிகள் ஏகாதி பத்திய நலன்களைப் பேணுகிறார் கள் என்றும், அவர்கள் மொசாட் டிடம் ஆயுதம் வாங்குவது தந்தி ரோபாயம் அல்ல சரணாகதியே என்றும்,அவர்களது இந்திய எதி ர்ப்பு,அமெரிக்க எதிர்ப்பு யாவும் ஒரு முகமூடியே என்றும் கொள் வது பிழை அல்ல.

ஊர்வலத்தில் சுவாரசியமான இன்னொரு காட்சியும் தென்பட் டது.ஊர்வலம் நகர்ந்து கொண்டி ருந்தபோது புலிகளின் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகி ஊர்வலத்தைப் பார்வையிட்டபடி சென்றுகொண்டிருந்தார்.அவரைத் தொடர்ந்தபடி அவருக்குச் சம மாகவும்,அருகாகவும் நடக்கமுற் பட்டு சனத்திரன் காரணமாகவும், யோகியின் கம்பீர நடை காரண மாகவும் தோற்றுப்போனபடி பரா(பரா ராணுவம் அல்ல,பழை ய ஈரோஸ் பிரமுகர் பரராஜசிங் கம்).யோகியும் அவரை அநேக மாக சட்டை செய்யாதபடி இரண் டடி இடைவெளிவிட்டே-உங்களை எங்களுக்குத் தெரியும் என்பது போல-( மக்களுக்கு ஈரோஸைத் தெரியாவிட்டாலும் புலிகளுக்குத் தெரியும்) நடந்து கொண்டிருந் தார் .பராவும் தனது நிலையை உறுதி செய்ய சனத்திரனுள் முய ற்சித்தபடியே இருந்தார். சனங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கள் அற்ற வெளியில் இது சாத்தியமாகக் கூடும்.

எங்கள் நண்பர்களில் ஒருவன் அடிக்கடி மனிதாயச் சிந்தனைகளும்.மானுட விழுமியங்களும்,சமுகப் பெறுமானங்களும் கலைஞர்களாலும், போராட்ட அமைப்புகளாலும் ஏன் முற்போக்கு பிரமுகர்களாலும் கூடக் கேள்விக்குள்ளாக்கப்படுவதைச் சுட்டிக்காட்டி வேதனைப்பட்டிருக்கிறான். அவனை நினைவுபடுத்தும் ஒரு சம்பவமும் ஊர்வலத்தில் நிகழ்ந்தது.

மடிந்த போராளி ஒருவனின் 'அஞ்சலிப் பேழையும்' வெறும் பலகை ஒன்றில் மல்லாக்காக்கிடத்திய,மன்னார்த் தாக்குதல் சம்பவத்தில் கொல்லப்பட்ட 3 இராணுவத்தினரின் சடலங்களும்...

மடிந்த மனிதனுக்கு தனது தலைக் கவசத்தை அகற்றி அஞ்சலி செய்கிற இராணுவ வீரனை கேள்விப்பட்டிருக்கிறோம்.

கல்லறைகள் மீது எவ்வாறு வியாபாரம் செய்யலாம் என்பதற்கு(தென் பகுதியில் அரசால் கொல்லப்படுபவர்களின் உறுப்புகள் யப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதற்கு இது ஒன்றும் குறைந்ததல்ல....) மானுட மனங்கள் எவ்வளவுக்கு வெறியூட்டப்படுகின்றன . என்பதற்குப் புலிகளின் இந்த ஊர்வலம் ஒரு சாட்சியம்.

புலிகள் மக்களுக்காக மடிகிறார்கள் என்றும்,அவர்களைமனிதாபிமானத்தோடு பாருங்கள் என்றும் கூக்குரல் இடுபவர்கள் இரண்டு விடயங்களில் தவறுவிடுகிறார்கள்:

01. மனிதாபிமானம் என்பது எல்லா மனிதருக்குமானது.
02. பிழையான திசைகளில் மக்களை இழுத்துச் சென்று அவர்களைப் பலி கொடுக்கின்ற ஒரு நிலையில் மடிகிற அந்தப் போராளிகள் சாவதற்காகவே போராடுகிற ஒரு நிலையில் அவர்களது மரணத்தைப் போற்றுவதா..... அல்லது அவர்கள் எவ்வாறு மானுட வாழ்வுக்கெதிராகத் திருப்பப்பட்டுள்ளனர் எனக் காட்டுவதா மனிதாபிமானம்

போர்முனையில் மடிகிற இராணுவச் சிப்பாயும்,புலியும் என்னவும் மானுட வாழ்வுக்காக, ஏகாதிபத்தியத்தின் கோரப்பிடியில் சிக்கியுள்ள மனிதர்களுக்காக மடியவில்லை என்பதை அம்பலப் படுத்தாது உடல்களைக் காட்டி வியாபாரம் செய்வது எந்தவகையில் மனிதாபிமானம்..? இதைக் கேள்வியுற்ற பின் சிங்களமக்கள்

www.tamilarangam.net

எவ்வாறு இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தருவார்கள்..? பழிக்குப் பழி,இரத்தத்துக்கு இரத்தம் எனப் பாடுங்கள் கலிங்கத்து பரணியும்,களப்புலி வீரத்தையும்.

ஊர்வலத்தில் காட்சிப்படுத்தபட்டிருந்த இன்னும் சில விடயகள் வருமாறு:

01. ஊழலற்ற நிர்வாகத்தை ஏற்படுத்துவோம்.
02. பதுக்கலைத் தடுப்போம்.

இன்றளவும் ஒரு சவர்க்காரக் கட்டி 20,- ரூபாவுக்கு விற்கிறது. கூடிய விலை விற்ற சிலரைப் பிடித்துத் தண்டம் அறவிட்டிருக்கிறார்கள்.அவர்கள் அநேகமாகச் சிறு சாலையோர வியாபாரிகள். பெரு முதலாளிகளையும் தின்று ஏப்பம் விட்டிருக்கிறார்கள். அது நோக்கம் வேறு.

உதாரணமொன்றாக கேரதீவு சங்குப்பிட்டிதுறையில் அமர்த்தப்பட்டுள்ள நிர்வாகத்தைக் கவனிப்போம்.

மக்கள் மந்தைகளாக நிறுத்தப்பட்டுள்ளனர்.மீறுபவர்கள் சில வேளைகளில் கொத்துரொட்டி அடிப்பவன் போன்ற ஒருவனால் தடிகொண்டு அடிக்கப்படவும் செய்கின்றனர்.

ஆலடி எனும் இடத்தில் மறிக்கப்படுகிற மக்கள் சங்குப்பிட்டி துறையை அடைய 3 மைல்கள் வரை பயணம் செய்ய வேண்டும் கடல்வெளியில் .சேவையில் படகுகள் மட்டுமேயுள்ளன.பாதை இலங்கை விமானப்படையின் 10குண்டுகளுக்குப் பிறகு 1குண்டின் சிதறலில் சேதமானது.

விமானத்தாக்குதல்கள் காரணமாக மக்களை மட்டுப்படுத்தியே ஆலடியில் இருத்திவிடுவார்கள். மாலை 5மணியளவில் வரிசையை அடைந்தேன்.முதல் 2 தொகுதியினர் 2 மணிநேர இடைவெளிகளில் அனுப்பப்பட்டுவிட்டனர்.9 மணியாயிற்று .அன்றுமாலைதான் விமானங்கள் 4 குண்டுகள் வரை வீசிச் சென்றன கேரதீவுத்துறையில்.. மக்கள் அச்சமுடன் கூடிய பதட்டம் கொண்டு காணப்பட்டனர்.9 மணியின்பின்னர் எவருமே விடப்படவில்லை-ஒரு சில இளம் யுவதிகளைத் தவிர! வரிசையில் வயோதிபர்கள் தொடக்கம் வல்வெட்டித்துறை வரை சைக்கிளில் பயணம் செய்யவேண்டிய பலரும் இருந்தனர்.

துறைக்கு மனிதர்களை விடாமைக்கான காரணமாக ஒருபடகு மட்டும் சேவையில் உள்ளதால் மனிதர்கள் இன்னும் ஏற்றி இறக்கப்படவில்லை என்று கூறப்பட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"முத்தமிழ் விழாவைப் பற்றி இவரேன் குறைப்படுறார்?"

"கட்டின சிகரங்களின்ரை உயரம் காணாதாம்.சோடினை யளும் பத்தாதாம் .கோடியாய் செலவழிச்சவை இன்னும் சோக்காய் சோடிச்சிருக்கலாமெண்டு அங்கலாய்க்கிறார்"

— வைத்தி



"அரசு இப்ப ஏன் அவ்வளவு கனக்க அறிக்கையள் விடுற யில்லை..?"

"அரசோடை நிக்கிற தமிழ் இயக்கங்கள்தான் அதைச் செய்துகொண்டிருக்கினமே!"

- இன்னன்னா

---

டது.ஒழுங்குகளுக்கு பொறுப்பான வர் தார்ப்பீப்பா ஒன்றில் அரசன் போல் வீற்றிருந்தார். (பதவிகள் இயல்பாகவே அதிகாரபோதை யை வழங்குகின்றனவா?அதிகார போதையுள்ளவர்களே பதவிக்கு வருகிறார்களா?என்பது ஆராயப் படவேண்டிய விடயம்) அவரைச் சூழ எப்பொழுதும் மானசீகக் குடை,கொடி ஆலவட்டங்கள் ஏந் திய மனிதர்கள்..... அதிகாரத்து வவாதமும்,அதற்கு அடங்கிப்போ தலும் 3ஆம் உலக நாடுகளின் கலாச்சாரமாகவே வளர்க்கப்பட் டிருக்கிறது.ஆத்ம பலம் இழந்த மக்கள்...

வரிசையில் நிற்பவர்கள் இடையேயும் ஒழுங்கு குலைப்பவ ர்களும் ,சுயலாபம் தேடுபவர்க ளும் இருந்தனர் என்பதும் உண் மையே...

அதிகாலை 4 மணியாயிற்று ஒருவாறு 'அதிகாரி' திருவாய் மலர்ந்தருளினார். "போகலாம்". ( மிகுதி அடுத்த கலத்தில்.... )

- அபராசிதன் (ஈழம்)

www.tamilarangam.net

# அர்த்தம்

(விமலேஸ்வரன் நினைவாக...)

அது அவனது மேசை.
புத்தகங்கள்.
பேனைகள்.
சிதறிக் கிடக்கின்ற
கடுதாசித் துண்டுகள்.
பாதி இழுக்கப்பட்ட
லாச்சியின் உள்ளிருந்து
எட்டிப் பார்க்கிற
ஒரு பழைய சஞ்சிகை...
எல்லாம் அவனுடையவை.

மேசையின் ஓரத்தே
நேற்றைய தினம் அவசரமாகப் புறப்படுகையில்
தட்டுப்பட்டு ஊற்றுண்ட
இன்னும் உலராத
மைக்கறை.

குறிப்புகள் எழுதப்படாத
அவனது டயரியின் பக்கங்களில்
எங்காவது
சிவப்பாலோ
நீலத்தாலோ
போடப்பட்டிருக்கும் புள்ளிகளைப் பார்த்தபடி
புரட்டுகையில்...

மூன்று வரிகள் மட்டுமே எழுதப்பட்ட
துண்டுக் காகிதம்.

மூன்றே மூன்று வரிகள்.

என்றைய பொழுதும்
தனது முடிவுக்கான பொழுதாகிவிடக்கூடிய
விறுவிறுப்பானதாய்
அமைந்து போனது குறித்து
புன்னகையுடன் பேச முடிந்த அவனை
நினைவு கூர்வதாய்
அந்தக் காகிதம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிகழ்காலம் முழுவதையும்
அர்த்தமின்றிக் கழித்தபோதும்
எதிர்காலம்
தன்னைப் போற்றப்போவதாய்
கனவு காணவும்
அதற்காகவே
குறிப்புகள் வரைந்து வைக்கவும் செய்கிற
இவர்களின் மத்தியில்
ஓய்வேயில்லாத வாழ்வையே
குறிப்புகளாக்கி விட்டுப்போன
எனது நண்பனே.

நெஞ்சு வெடிக்கின்ற வேதனையுடன்
என்றென்றைக்கும்
நினைவுகூரப்படுவதாய்
காக்கைகள் கூடச் சாட்சிக்கு வரமறுக்கும்
எமது தேசத்தின்
தெருவோரத்தில்
குருதியை ஓடவிட்டு
ஒரு முட்டாள் தேசத்தின் அறியாமைக்காக
துயருற்ற வேதனைச் சிரிப்புடன்
நீ கிடந்தாய்...

இப்போது புரிகிறது
உனது வரிகள்.

சாவதிலும் அல்ல
சாகடிக்கப்படுவதிலும் அல்ல
வாழ்வதில்தான் இருக்கிறது அர்த்தம்.

*

சிட்டு (ஈழம்)



www.tamilarangam.net

# மயான பூமி

எந்த மாமுனிவனுக்கு
வாக்குக் கொடுத்ததால்
எங்கள் ஈழ பூமியின்
வேந்தர்கள் இன்று
இத்தனை மயானங்கள்
காக்கின்றார்கள்?!

###

சாதி முனிவன்
சக மனிதனைக் கேட்டான்.
பழம்பெருமை முனிவன்
சுய அறிவினைக் கேட்டான்.
இனவாத முனிவன் உடைமைகள்
கேட்டபின்.
ஓடிவந்த உட்பகை முனிவன்
மீதி அவல வாழ்வையும்
கேட்டான்.

இன்னமும்.......

எந்த மாமுனிவனுக்கு
வாக்குக் கொடுத்ததால்
எங்கள் ஈழ பூமியின்
வேந்தர்கள் இன்று
இத்தனை மயானங்கள்
காக்கின்றார்கள்??!!

●
இரா. ரஜீன்குமார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கறுப்பு மாதங்கள்

83ஆம் ஆண்டு தமிழர்களுக்கெதிராக இடம் பெற்ற சிங்கள பௌத்த இனவாதக் கலவரத்திலிருந்து இலங்கையில் பெரும்பாலான யூலை மாதங்கள் இரத்தம் பூசிய மாதங்களாகவே கடந்துள்ளன.தமிழர்கள் தாம் வாழ்ந்துவந்த பாரம்பரிய பிரதேசங்களிலிருந்தே துரத்தியடிக்கப்பட்டு,கொல்லப்பட்டதுடன் ,சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்ப்போராளிகளும் அடித்துக் கொல்லப்பட்ட பாரம்பரியத்தை இலங்கை இனவாத அரசு அரங்கேற்றி வைத்தது.

இன்றுவரை இந்த இனவழிப்பு பல புதுப்புது வடிவங்களில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதன் அண்மைய நடவடிக்கையாக கொக்கட்டிச்சோலையில் தமிழர் என்பதாலேயே 185க்கு மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். வாள் வெட்டு, உயிருடன் தீ வைப்பு, பாலியல் வன்முறை என்று அரச இராணுவம் வெறியாட்டம் போட்டுள்ளது.

செத்தது கொஞ்சப்பேர்தான் என்றும்,புலிகளுடனான சண்டையிலேயே கொல்லப்பட்டனர் என்றும் அரசு வழமையான தனது காரணங்களைக் கூறுகிறது. இச்சம்பவத்தை 'விசாரிக்க'ஆணைக்குழு நியமித்துள்ள அரசு சீனாவிலிருந்து நவீனரகப் போர்விமானங்களை வாங்கியிருக்கிறது. இவ் விமானங்கள் இரத்மலானையிலிருந்து வடக்கு, கிழக்கிற்கு பறக்க சில நிமிடங்கள் போதும். ஒலியேதுமின்றி பரவலாகக் குண்டுகள் வீசக் கூடிய இவ்விமானங்களை ஓட்டுவதற்கு இலங்கை விமானப்படையினருக்குச் சீனாவில் பயிற்சியளிக்கப்படுகிறது.இவை இன்னும் பல கொக்கட்டிச்சோலைச் சம்பவங்கள் நடக்க இருப்பதை மட்டுமல்ல, தமிழர்களை முற்றாக அழிக்கும் இலங்கை அரசின் நோக்கத்தையே காட்டுகின்றன.

இராணுவம் தான் பொல்லாதது,பிரேமதாச நல்லவர் என்று அரசின் ஐந்தாம்படையாக இயங்கும் தமிழ் இயக்கங்கள் கூறுகின்றன.

இப்படியான கொலைச்சம்பவங்களினால் ஏற்படும் உணர்ச்சிப் பெருக்கைப் பயன்படுத்தி தமக்கு ஆட்களைப் சேர்த்துக் கொள்வதையே புலிகள் முதன்மையாகக் கருதுகின்றனர். இதற்கேற்பவே தமது போர் நடடிக்கைகளையும் அமைத்துக் கொள்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அண்மையில் ஊர்காவற் துறையில் இராணுவம் வந்திறங்கியபோது அந்தச் செய்தியை மக்களிடமிருந்து மறைத்ததில் தப்பியோடாமலிருந்த அந்த ஊர் மக்கள் பின்னர் இராணுவத்தினரால் கொல்லப்பட்டமை இன்னுமோர் உதாரணம்.

அப்படியானால் இவர்கள் அனைவருக்கும் இடையில் வாழ நிர்ப்பந்தக்கப்பட்டுள்ள மக்களின் நிலை என்ன..? இவர்களின் குரலை யார் செவிமடுப்பார்...?



தீர்வு
----

ஜேர்மனியில் இருக்கும் தற்காலிக விசாவுள்ள தமிழ் அகதிகளை இன்று மிரட்டிக்கொண்டிருக்கும் விடயம் இலங்கைக்கு நாடு கடத்தப்படவிருப்பதாகும். ஐரோப்பா வெள்ளையருக்கே என்ற நாஸிஸத்தின் ஒரு பகுதியாக எடுக்கப்பட்ட இந்த முடிவு இங்கு தஞ்சம் கோரிய அகதிகளின் உயிர்ப்பாதுகாப்பைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

நாடுகடத்தல் எப்படி நடக்க போகிறது என்பதை திட்டமிட்ட வகையில் ஜேர்மன் அரசு மறைத்து வைத்துள்ளதால் அகதிகளுக்கு உதவிசெய்யும் சட்டத்தரணிகளும்,அகதி உதவி நிறுவனங்களும் இந் நடவடிக்கையை எப்படி எதிர்கொள்வதெனத் தெரிந்துகொள்ள முடியாமலிருக்கின்றன .ஜேர்மனியில் நீண்டதான கோடைகால விடுமுறையில் பல மாணவர்களும்,உதவி நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் வெளிநாடுகளுக்குப் போயிருக்கும் சமயம் பார்த்து நாடுகடத்தலுக்கான சந்தர்ப்பத்தைத் தெரிந்தெடுத்தமை கூட திட்டமிடப்பட்ட நடவடிக்கையேயாகும்.

வளர்ச்சியடைந்துவரும் நாஸி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஸமும், அரசினால் அதிகரிக்கப்ப ட்ட வரிகளினால் எழுந்துள்ள ஜேர்மனியர்களின் அதிருப்தியும், அரசின் பிரச்சாரங்களும் வெளி நாட்டவர்களுக்கெதிராய் திரும்பி யுள்ள நிலையில் அகதிகள் தொடர்ந்து இங்கே தங்கியிருப் பதென்பது கேள்விக்குரியதே.

மேற்கிலிருந்து ஆயுத வியா பார அரசுகளால் உலகின் ஏனை யபாகங்களில் அழிவுகள் உண்டா க்கப்பட்டு,அதனால் அகதிகளாக் கப்பட்ட மக்கள் இந்த நாடுக ளில் தஞ்சம் கோருவதையும் தடைசெய்யும் இந்நாட்டு அரசுக ளின் ஜனனாயக முகமுடிகளைக் கிழிக்கவேண்டியது நமதுகடமை.

அதே சமயம் இந் நாடுகளி லிருந்து இவர்கள் எம்மைத் துர த்தியடிக்கும்போது,எங்கள் தாய் நாடுகளுக்கு நாங்கள் திரும்பிச் செல்ல விரும்பாததேன்? அங்கு திரும்பிச் சென்றால் எங்களுக்கு உயிராபத்து என ஏன் கூறுகி றோம்? அங்கே பிரச்சினை முடி யும் வரையாவது எங்களை இங் கே தங்க அனுமதியுங்களென்று நாம் கூறுகின்ற இலங்கைப் பிர ச்சினை என்ன? இக் கேள்விகளு க்கு நாம் நிச்சயம் பதில் தேடி யேயாகவேண்டும்.

எங்களைத் தாய்நாட்டுக்குத் திரும்பிச்செல்லவிடாமல் பயமுறு த்தும் காரணிகள் அங்கு வாழ் ந்துகொண்டிருக்கும் மக்களுக்குப் பயமுறுத்தலாய் இல்லையா? இத் தனை வருடங்கள் இங்கு தங்கி யிருந்தும் இனியாவது திரும்பிப் போக முடியாத நிலையே இலங் கையில் இருக்கிறதென்றால் அந் தநிலைமையில்தானே அங்குள்ள வர்கள் வாழ்ந்து கொண்டிருக்கி றார்கள்?

அவர்களின் மரணத்துள் வாழும் நிலையை மாற்ற நாம் இங்கிருந்து என்ன செய்தோம்? இங்கு எமக்குள்ள வாய்ப்புகளை எந்தளவுக்குப் பயன்படுத்தினோ ம்?திருப்பியனுப்பப் போகிறார்க ளாம் என்றதும்தான் பலருக்கு வந்த இலங்கை பற்றிய அக் கறை ஏன் முன்பே வரவில்லை? நாடுகடத்தல் பற்றிய பயம் இல் லாவிட்டால் இந்த அக்கறை திரும்பியும் இல்லாமல் போய்வி டுமா? இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் மரண த்திலும் குருதியிலும்தான் எங்க ளது இருப்பை இங்கே நிலை நிறுத்திக்கொள்ளப் போகின் றோமா?

எமது அகதி வாழ்வை

www.tamilarangam.net

நாம் கேள்விக்குட்படுத்த வேண்டும். இலங்கை அரசாலும், அரச படைகளாலும், அனைத்துத் தமிழ் இயக்கங்களாலும் பணயம் வைக்கப்பட்டுத் துன்புறுத்தப்படும், அழிக்கப்படும் மக்கள் பற்றிய, சாப்பாடு, மருந்து, மரணத்திலிருந்து தப்ப இடம் எதுவுமில்லாமல் நிர்க்கதியாயிருக்கும் மக்கள் பற்றிய உணர்வு எமக்கு இருக்க வேண்டும். இயக்கத்திற்கு மாதக் காசு கொடுப்பதனால் வரும் சுய திருப்தி எந்த விடிவையும் தரப் போவதில்லை.

இங்கே வளர்ந்துவரும் இன, நிறவாதம், வெளிநாட்டவர்களுக்கெதிரான விரோதம் ஆகியவை எம்மைத் துரத்தும்போது நாம் போக வேண்டிய இடம் எமது தாய்நாடாகத்தானிருக்கும். அங்கு நாம் போக வேண்டுமானால் உயிர்ப் பயமின்றி வாழும்நிலை உருவாக வேண்டும். அந்நிலையை உருவாக்க நாம் இங்கிருக்கும்போதே செயற்படவேண்டும்.

இதுவே எமது நாட்டுக்கு எம்மை விருப்புடன் போகவைப்பதுடன், அங்கு வாழும் மக்களுக்குச் செய்யும் உதவியாகவுமிருக்கும்.


# தூண்டில்

ஜூன் 1991

கலம்: 43



ஆசிரியர் குழு: கடலோடிகள்

முகவரி: THOONDIL
Südasien Büro
Grosse Heimstr. 58
4600 Dortmund 1
Germany

தொலைபேசி: (0231) 136633
<புதன்கிழமைகளில்
14-20 மணிவரை>


சந்தா

| | | | |
|---|---|---|---|
| ஜேர்மனி | 6 மாதங்கள் | = | 20,- D.M |
| | 1 வருடம் | = | 38,- D.M |
| ஐரோப்பா | 6 மாதங்கள் | = | 25,- D.M |
| | 1 வருடம் | = | 48,- D.M |
| அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியா | 1 வருடம் | = | 65,- D.M |
| அவுஸ்ரேலியா | 1 வருடம் | = | 75,- D.M |

தபாற்கணக்கு இல: 308 074 68
Postscheckamt Dortmund
BLZ 440 100 46

சஞ்சிகை வளர்ச்சிக்கான உதவியில் ஒன்றாக உங்கள் சந்தா நிதியை அனுப்பிவைத்ததும் எமக்கு கடிதம் மூலம் அறிவியுங்கள்.

உங்கள் கருத்துகள், விமர்சனங்களுடன் எங்களுடையதும், உங்களுடையதுமான முயற்சிகளைப் பயனுள்ளதாக்குவோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அறிவித்தல்

நண்பர்களே!

இந்தப் போராட்டத்தில் நாம் இறந்து போகலாம். அப்படி நடந்தால் நீங்கள் மனம் தளரவேண்டாம். அராஜகம் அதிகாரத்திற்கு வந்து மக்களை அழித்தொழிப்பதைவிட நாம் ஒரு சிலர் எம்முயிரை இழந்தாவது இந்த அராஜகத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வருவோம்.

எந்த மக்களின் விடுதலையை நாம் நேசித்தோமோ அந்த இலட்சியத்தை நீங்கள் பொறுப்பெடுப்பதே எமது இறப்பிற்கு மதிப்பளிக்குமேயொழிய கண்ணீர் சிந்துவதும் அஞ்சலிக் கூட்டங்க்ள் நடத்துவதும் அல்ல.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்